# ஓர் அருஞ்சிறு குறுவரி!...


பேராசிரியர்

**அருளியார்**



**வேரியம்**

**புதுச்சேரி - 605 009**

# நூல் விளக்கம்
## BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| நூல் பெயர் | : | **ஓர் அருஞ்சிறு குறுவரி!...** |
| நூல்ஆசிரியர் | : | பேராசிரியர் அருளியார் |
| பதிப்பு | : | 27.07.2025 ஞாயிறு<br>கடகம் 11, தி.பி. 2056 |
| தாள் தகைமை | : | படமக்கல்<br>1/8 அரைக்கான் மடி (Demy) |
| பக்கங்கள் | : | 56 |
| படிகள் | : | 1000 |
| விலை | : | உருவா நூறு (100) |
| படவடிப்பு | : | தோழர். அ.தே. தெள்ளியன் |
| கணிப்பொறிஞர் | : | திரு. நா. கமலச்செல்வன்<br>திரு. நா. சேகர்<br>திரு. சு. பன்னீர்செல்வம் |
| வெளியீட்டகம் | : | வேரியம்<br>வேரியல் ஆராய்ச்சி நிறுவனம்<br>32-அ, புலவர் வீதி நீட்சி,<br>தமிழூர் (திலாசுப்பேட்டை),<br>புதுச்சேரி - 605 009. |
| அச்சாக்கம் | : | அன்னை அருள் அச்சகம்,<br>புதுச்சேரி |

## குறுக்க விளக்கம் (நூற்பெயர்ப்பட்டி)

| | | |
|---|---|---|
| அகம் | : | அகநானூறு |
| ஐங்குறு | : | ஐங்குறுநூறு |
| ஒ. நோ. | : | ஒப்பு நோக்க |
| கலி | : | கலித்தொகை |
| கலிங்க | : | கலிங்கத்துப் பரணி |
| கம்பராமாயணம் | | |
| குறள் | : | திருக்குறள் |
| குறிஞ்சி | : | குறிஞ்சிப்பாட்டு (பத்துப்பாட்டு) |
| குறுந் | : | குறுந்தொகை |
| சிலம்பு | : | சிலப்பதிகாரம் |
| சேரமான் பொன் வண்ணத்தந்தாதி , திருக்கோவையார் | | |
| திருவாச | : | திருவாசகம் |
| தொல். சொல். உரி | : | தொல்காப்பியம் –சொல்லதிகாரம்- உரியியல் |
| நந்திவனப்புராணம் | | |
| நற் | : | நற்றிணை |
| நாலடி | : | நாலடியார் |
| பதிற்றுப் | : | பதிற்றுப்பத்து |
| பரி | : | பரிபாடல் |
| பழமொழி | : | பழமொழி நானூறு |
| பிங் | : | பிங்கலம் |
| புறம் | : | புறநானூறு |
| பெருங் | : | பெருங்கதை |
| பெரும்பாண் | : | பெரும்பாணாற்றுப்படை |
| பொருந | : | பொருநராற்றுப்படை |
| மதுரைக் | : | மதுரைக்காஞ்சி |
| மலைபடு | : | மலைபடுகடாம் |
| முல்லைப் | : | முல்லைப்பாட்டு (பத்துப்பாட்டு) |
| வெங்கை | : | வெங்கைக்கோவை |

## இக் குறுவரி நூற்கென – அருகுறும் அணியுரை!...

அறிவியலுள் மிகப்பாரியதும் - கடுங்கடுமையதும் - கட்டிறுக்கங் கொண்டதும் - பேரயர்ச்சி தருமியல்பினதும் – மீமயக்கு தந்து தலைசுற்றலுருவாக்குவதும் – துயிலறுத்துத் தொய்விப்பதும் -எண்ணக்கிளைகளில் நூறு பன்னூறாக விடர்களூற்று அகற்சிப்பட்டுக் கொண்டே விரிவார்வதும் - பெற்ற கல்வியறிவு, கேள்வியறிவு, பட்டறிவு ஆகியவற்றுக்கேற்ப எண்ணத்துள்ளும் எல்லையுறுத்தி மேற்செல்லவியலாது இடர்ப்படுத்துவதும் - தீர்வெய்தி நிறைவுற நிறுத்தி விடாததும் - புடவியியலின் புதிர் - வியல்வுசார் பெருவெடிப்புகளாகி விளர்வுறுவதும் - கால நெடுமைக்கு உள்ளாகியமையால் எண்ணத்தின் நீணெடிய சிந்திப்புகளால் உந்தப்பெற்றும் தள்ளப்பெற்றும் தொடரியல்வுறுவதும் - ஆகிய அறிவுத்துறை, “வேரியல்” என்னும் “மொழியகழ்வாய்வியல்” (Linguistic archaeology) ஆகும்!

இத்துறையில் ஆழ்ந்து ஈடுபடும் ஆய்வறிவாளன் எவனும், எந்தப் பிற வேலையினையும் ஒழுங்காக முடிக்க இயலாதவனாகவே இயங்கியவாறிருப்பான்!

“வினையின் நீங்கி விளங்கிய அறிவின் முனைவன்” எனும் தொல்காப்பியச் செறிவுவரி, பெரும்பாரிய வியப்புண்மைகளைச் சொல்லும் ஒரு மந்திரவரியாகும்!

விளங்கிய அறிவுத்தெளிவினை ஒருவன் பெறவேண்டுமாயின், அதற்கெனமுயலும் முனைவன், - வேறு பிற வேலைகளில் எந்த ஒன்றனையுமே செய்யக்கூடாது! செய்யவே கூடாது! அவனால் செய்யவும் இயலாது! செய்யினும் செப்பமாகவும் ஒழுங்காகவும் செய்துமுடிக்க வியலாது! வேலையினின்று அறவே விலகிநிற்கும் வேலையே, ஓர் அறிவனுக்கு முதல் வேலையாக இருக்க வேண்டும்!

அவனுக்கு இடர் வரும்! இக்கட்டு வரும்! துயர் வரும்! துன்பம் வரும்! நோய் வரும்! நொடிவும் வரும்! வரத்தான் வரும்! உடம்பு எனும் அவனுக்கியைந்திருக்கும் கொள்கலத்துள் நோய்த்தாக்க இடும்பைகள் பலவும் உட்கிடைகளாகும்!

துறவினுங் கொடியது, இவனின் நீப்பு! உலகப் பிறவினைகளின் நீப்பினுள்தான் இவனின் எண்ணத்துவிளைவு,- தீர்வும் பயனும் திரண்டு முடிவாரும்! வினை நீப்புக்குப் பின்னீடே, விடிவு நோக்கிய இவனுக்கான செல்லவும் (Travel) செல்லும்!

எது எதுவாயினும், இவனின் எண்ணமும் - ஏற்றத்தார்ந்து நீடும் ஆய்வுவினையும் ஓய்வுறா! நீட்சியே அங்கு மாட்சியுறும்!

அறிவுக்கு, வேண்டியதாகும் ஓர் எல்லையுண்டு! எல்லையின் அவ்வறுதியில்தான், - அறிவு தனக்குரிய பயனை முழுமையாய்ப் பற்றி நிறைந்து முடிவாகிய தீர்வுங்கொள்ளும்!

“இல்” என்பது துளை; அதுவாவது, புள்ளி! (“புள்ளி” என்பதூஉம், “புய்” எனும் துளைக் கருத்து வேரினின்று எழுந்து, புய்

> புய்ல் > புல் என வளர்ந்து உட்காழ்ப்பிலா நிலைத்திணை குறித்தும், புல் > புல் + அம் + குழல் > புல்லங்குழல் > புல்லாங்குழல் என்பன போன்ற பலவகைத் துளைப்பீடு கொண்ட பொருட்சொற்களை விளைத்தும் - கொத்தித் தின்னும் இயல்புடைய பறவை குறித்துப் (புல்>) புள் எனச் சுட்டியும் – "துளை" என்றவாறு தெளியச் சுட்டுதற்குப் புள் > புள்+ள்+இ > புள்ளி என நீடி நின்றும் விரிவார்ந்த சொல்-விளைவுகள், முறையே நிரல்படி எண்ணி நெஞ்சுட் கொள்ளத் தக்கன!)

இல் > இல் +ல்+இ > இல்லி = துளை (காண்க: "இல்லி தூர்ந்த பொல்லா வறுமுலை") (புறம்)

இல் > எல் (இகர-எகரத் திரிபு) எல் + ல் + ஐ > எல்லை. குழியிட்டு, அடையாளக் கல்லை நாட்டி நிலை நிறுத்துமிடம், ஒரு குறிப்பு இடம் ஆகும்! இல்லியுள் (குழியுள்) நிலைக்கல்லை நிறுத்திக் குறிப்பீடு செய்யும் அடையாள இடம், எல்லை ஆகும்!

குழியிட்டு நாட்டப்பெறும் கல், எல்லைக் கல்! (காண்க: "எல்லைக் கல்லின் நிறீஇ" (மீனாட்சியம்மைப் பிள்ளைத் தமிழ் : 38) எல்லைக்கட்டு என்பது, வரம்பு. (கருதுக: "எல்லைக்கண் நின்றார்" (குறள் : 806)

"எல்லை" என்பது இடப்பொருண்மையது! இச் சொல், இடத்தினைக் குறித்தவாறு இலக்கணத்துள் பயிலப்பெறுவதும் ஈண்டு எண்ணத்தக்கது! எல்லை = ஐந்தாம் வேற்றுமை (காண்க: "எல்லை யின்னும் அதுவும் பெயர் கொளும்" (நன்னூல்: 319)

தாம் வாழும் குடியிருப்புகளிடத்து எல்லையாகும் அறுதி நில அமைவில் - வணங்கற்குரிய தங்கடவுளை நிலைநிறுத்திக் காக்க வேண்டிய வழக்கமானது, இவ்வினவழக்கப் பான்மைச் செயல்களுள் ஒன்று!

இவ் எல்லைக் காவலுக்கான தெய்வங்கள் பல! எல்லைக்கருப்பன் – எல்லையம்மன் – என்பவனவற்றை ஈண்டு எண்ணுக!

“அம்மம்” என்பது தாய்ப்பாலினைக் குறித்த ஒரு பண்டைப் பழஞ்சொல்! தாய்ப்பாலுக்கு அச்சொல் - முதலில் பொருட்பட்டுப் பின்னர், அப் பால் நல்கும் நகிலுக்கும் சிறப்புக் குறிப்பீடு கொண்டது! (காண்க: “திரள் அம்மத் தண்பால் உண்டோய்” சேந்தன் செந்தமிழ் : அமைதி : 47)

அம்மம் = தாய்ப்பால்

“அம்மம் உண்ணத் துயில் எழாயோ” (பெரியாழ். தி:2,2,1)

(நிலத்தில் படியப் படரும் (நம் அனைவருக்கும் நன்கு தெரிந்த-) செடிவகை, ‘அம்மம்பச்சரிசி’ எனப் பெறுகின்றமை ஈண்டுக் கருதத்தக்கது!

நுண்ணளவிலான பச்சைத் தினையரிசி அடர்வொடு பரவிப் படரும் நிலைத்திணை, இது! பச்சையரிசி போன்ற சுவையுடையது, அவ்வரிசித்திரள்! பெயரில் அச்சொல், பின் அடை கொண்டது, அதன் சுவையொப்புமை கருதியமையாலேயாம்!

இதன் எப்பகுதியைக் கிள்ளினாலும் - தண்டுக்கிளையை முறிக்கினும் அவ்வவ்விடத்தே செறியப் பால் சுரந்தெழும் நிகழ்வுக் காட்சியே, இப்பெயரீட்டுக்குக் காரணமாகும். அடிப்படையை உணராமல், (அறியாதேயே) அம்மம்பச்சரிசியை அம்மான்பச்சரிசி என, நம்மவர் பிழையாக வழங்குகின்றனர்! எம் மானுக்கும் தொடர்புடையது அன்று, இது! அம்மம் எனும் பாலுக்கே அடிப்படையாகிப் பொருட்பெயரீடு பெற்றுள்ளது!

இதில், மூவகையுள!

1. *சின்னம்மம் பச்சரிசி* (Euphorbia Thymifolia)
2. பெரியம்மம் *பச்சரிசி* (Euphorbia pilulifera)
3. *சிவப்பம்பம் பச்சரிசி* (Euphorbia rosea)

"அம்மம்" என்னும் பாலினைக் குறித்த சொற்கருத்து அடிப்படையிலேயே, அப் பாலினைக் குழந்தைக்கு ஊட்டும் தாயானவள் "அம்மை" எனப்பெற்றாள்!

"அம்மா" என்பது விளியாக வழங்கப்பெற்றுப், பின்னர் - "அம்மா" என அழகுப் பெயர்ச்சொல்லாகிப் பிறங்குகின்றது!

வியப்புக்கும் - இரக்கத்திற்கும் - வலிப்பேற்றுக்கும் - உவப்புக்கும் ஆக உயிர்க்கப்பெறும் உணர்வூற்றுக்கான உயரொலிப்பு, இவ் "அம்மா!"

"அம்மம்" - எனப் பால் குறித்த சொல், அதன் இருப்பு சுரக்கும் இருப்பிடமாகிய நகிலுக்கும் "அம்மம்" எனும் அதே பெயராலேயே சுட்டப்பெற்றது!

"கொம்மை யம்மம் அசைவுற" (இரகு.நாட்டுப். 50)

அம்மா + அன் > அம்மான் = அம்மாவுடன் பிறந்தோனாகிய அண்ணன்! அம்மாவுடன் பிறந்தோனாகிய தம்பி!

இவ்விருவரும் தமிழவழக்கில் அம்மான்கள்! அறாத உறவுத் தொடர்வழக்கு, இது! மலையாளத்துள் "அம்மாவன்" எனும் பண்டைய சொல்லே வழக்குள் நின்றுளது!

"அம்மான்" என்பதுவே, "மம்மான்" என்றாகிப், பின் - மாம்மான் என நீண்டு - மாமான் எனக்கொழுமையுறத் திணிவுற்று - மாமா என விளிப்பிலழைப்புற்றுப் பின்னர், - அதுவே உறவுப் பெயர்ச் சொல்லாகி உவப்பூட்டிக் குளிர்விக்கின்றது!

இதே திரிபு வகைமைதான் மேலை மொழிகளிலும் சாரலுற்றுளது!

அம்மா!... துமாக்கி (ஈரானியக் கிளை) mama

Greek: mama, mamme (French) maman

Swahili : mama (Latin) mama

Rumanian : mama (Spanish)mame

Italian : mamma (German) mamma

(Welsh) mam

(Latin) mamma = breast

"அம்மம்" எனும் சொல், > (L) mamme = முலை, நகில்

(Latin) mamma > mammilla : முலைக்காம்பு (teat)

(diminutive of mamma)

(Eng.) mammilary : நகில் சார்ந்த

> (Eng.) mammalgia : நகில்வலி

mammary : நகில்சார்ந்த

mammary gland : நகிற் சுரப்பி

mammectomy : நகில்-நீக்கறுவை

mammalogy : பாலூட்டியியல்

அம்மம் (மம்மம்) எனும் உரு மார்பகத்தினைக் குறித்து, இந்தோ - ஐரோப்பிய மொழிகள் மிகப் பலவற்றுள்ளுமாக mamma எனும் வடிவுருவிலேயே பரவலாக வழங்கி வருகின்றது!

Mammalia = பாலூட்டிகள். இது mammalis எனும் இலத்தீனச் சொல்லினின்று உருப்பெற்றது!

சுவீடிசு (Swedish) நாட்டு "இயற்கையறிவியல் அறிஞர்" இலின்னேயசு (Linnaeus) அவர்கள்தான், மேற்குறித்த இலத்தீன வழக்கிலிருந்த mammalis என்பதினின்று பாலூட்டிகளைக் குறித்தற்கென "mammalia" எனும் குறிப்பீட்டுப் பெயரமைத்து

வழங்கத் தலைப்பட்டார். இது பதினெட்டாம் நூற்றாண்டில் இயன்றது. ஆங்கிலத்துள், 19-ஆம் நூற்றாண்டில்தான், mammal என்ற வழக்கே தொடங்கியது!

தமிழ்மொழியாக்கத்துள், அதுவாவது தமிழ்ச் சொல்லுருவாக்க ஆட்சியுள் அதுவும் குறிப்பாக - ஒலியியலுள் மகர - வகரச் சொற்களுள் சில, ஒற்றியன்மை கொண்ட பாங்கினதாகும்.

(வினைகெட்டு > மெனக்கெட்டு

| | |
|---|---|
| விஞ்சி > மிஞ்சி | குமி > குவி |
| விழித்தல் > முழித்தல் | வளார் > விளார் |
| மிலார் > மிலாறு | வானம் > மானம் |

வானமாரிப் பயிர் > மானவாரிப்பயிர்) (மானாவாரி)

செம்மை > செவ்வை என்றவாறான இயல்புத் திரிபு போல், அம்மை எனும் தாய் குறித்த சொல்லும் தமிழுள் அவ்வை என்றானது! இரு சொற்களும் தொடக்கத்துள், - தாய் குறித்தனவே! அம்மா வழக்குப் போலவே - தமிழியமொழிகள் பலவற்றுள்ளும் இவ் அவ்வை (அவ்வா) என்பதுவும் நிலைநின்று நீடியது!

காண்க : (கோத்தம்) “அவ்” (தொதுவம்) Afuf

(கன்னடம்:) அவ்வெ, அவ்வா. (அவ்வெ > அப்பெ) abbe

(குடகு) அவ்வெ. (துளு) அப்பெ. (தெலுங்கு) அவ்வா

(parji) அவ்வா (தந்தையின் தாய்) (கடபா) அவ்வே (மூதாட்டி)

(கோண்டி) அவ்வ

அம்மை > அவ்வை = தாய்

“அவ்வைக்கு மூத்த மாமன்” (சீவக : 1046)

அவ்வை உயிர் வீவுங் கேட்டாயோ, தோழி (சிலம்பு:29 : 5:4)

(தோழீ! தாய் உயிர் நீத்ததனைக் கேட்டாயோ!...)

அவ்வை : முதியவள்

"அவ்வை மகளிவள் தான்" (சிலம்பு: 29: 8:3)

அவ்வை = தவப்பெண் (சூடா. நி.)

அவ்வை எனும் இச்சொல், - பண்டையில் எவ்வளவுக்குப் பயன்பாட்டில் நிலைநின்றுளது என்பதனை, - **எவ்வை** – தவ்வை – நுவ்வை என்னுமாறான வழக்குகளால் தெளியவுணரவியலும்!

எம் + அவ்வை (எ(ம்)+(அ)வ்வை > எவவை = என் தலைவி.

(என் தங்கை) (ஐங்குறு : 88 : 3-4)

எம்+அவ்வை > எவ்வை = என் தலைவி (ஐங்குறு: 89)

நும்+அவ்வை. நு(ம்) + (அ)வ்வை > நுவ்வை.

நுவ்வை = உன்னுடைய அக்கை. (மூத்தாளாகிய உன் அக்கை)

"நும்மினும் சிறந்தது நுவ்வை ஆகும் என்று" (நற். : 172:4)

தம் + அவ்வை (த(ம்) + (அ)வ்வை > தவ்வை = தம்முடைய அக்கை

தம் = உரிமையடை (பன்மை). (காண்க: தம் + அக்கை > தமக்கை)

(கருத்தளவில், தவ்வையும் தமக்கையும் நேர்வுச் சொற்களே)

தவ்வை = தாய்.

"ஐயையும் தவ்வையும் விம்மிதம் எய்தி" (சிலம்பு: 16 : 52)

"பட்டோன் தவ்வை படுதுயர் கண்டு" (சிலம்பு: 15:80)

தவ்வை : தம் – அக்கை (அவ்வை = மூத்தோள் < தாய்)

"தாரை தவ்வை தன்னொடு கூடிய" (மணி :7: 104)

"செய்யவள் தவ்வையைக் காட்டி விடும்" (குறள் : 167)

செய்யவள் : வளத்துக்குத் (செழித்த வளமைக்கு) துணை நல்கும் தெய்வமாகிய திருமகள்.

தவ்வை : செய்யவளாகிய திருமகளுக்கு அக்கை. அவள், மூத்த தேவியாகிய மூதேவி!

எவ்வை - நுவ்வை - தவ்வை எனும் இம் முச்சொற்களையும் இவ்வாறு விளங்கக் காட்டியமை, எற்றுக்கெனின்,- இவ் அவ்வை எனும் பண்டைத் தமிழ்த்திரிபு வழக்கு - தொன்மையிலேயே இத் தமிழகத்தே பரந்தியன்று வழங்கியுளதென்பதை வலியுறுக்கவும் – உணர்த்தவுமேயாம்!

இதனின்று, வேறாகிய ஒரு பாதையில் - ஒரு செய்தியை விளங்குறுவோம், வாருங்கள்!

உலகமொழிகளுள் பலவற்றுள்ளும் பலவகை வடிவங்களிலாக, நம் தமிழ்மைச் சொல் - பொருண்மை விரிவுகள் பலவகையில் பரந்து படிந்துள.

"Gothic" மொழியில் "ஆயாய்" என்னப்பெற வேண்டிய அம்மம்மா (அம்மா+அம்மா) அவர்களைக் குறித்து, அதுவாவது - ஆயாவைக் குறித்து awo (a grand mother) என வழங்குவது, ஈண்டுக் கருதத்தக்கது.

"கிளை" என்னும் பிரிவு – பிளவுக் கருத்தமைந்த அடிச்சொல், மரத்தின் வளர்ச்சிப் பிரிவு உறுப்பாகிய கிளையினைக் குறித்தது.

அது, கிரேக்கத்தில் "klaw" எனப் படிவெய்தியது.

இந்தக் klaw என்னும் வடிவச்சொல், klow என்றும் வழங்கியுள்ளது.

(L) clava = stick - கிளையாகிய கழி, தடி.

(Eng.) clavate : club shaped club = தடி, குண்டாந்தடி

clavicle (ANAT) : கிளையாகிய கழி உருவுடைய தோள்பட்டை எலும்பு

clavicula > clavicle

(GK) klon = young shoot or twig ( = சிறுகிளை)

(Eng.) clone : a DNA population derived from a single molecule by recombinant DNA Technology.

(Eng.) cloning = the formation of a clone

(cloning எனும் அறிவியற் கலைச்சொல்லுக்கு, 25 ஆண்டுகளுக்கும் முன்பாகவே "கிளைவாக்கம்" எனும் சொல்லை உருப்படுத்தி நிலைப்படுத்தியது, என் நினைவுக்கு வருகின்றது!

(காண்க: அருங்கலைச்சொல் அகரமுதலி பக்கம் :156 )

இனி, மறுபடியும் அவ்வையை நினையலாம், வாருங்கள்.

அவ்வை > என அம்மை குறித்தெழுந்த அடுத்த படிநிலைச் சொல், Avus, Avom, Avun என்றவாறு, இலத்தீனத்தில் தாய்சார்ந்த எனும் பொருண்மையில் உள்வாங்கப்பெற்றது.

Avunclavis (clavis : கிளைச்சார்பு, கிளை) தாயின் கிளைச்சார்பு உறவு என்னும் பொருளில் Avanculus எனும் சொல், இலத்தீனத்துள் உருவாயிற்று.

(L) Avanculus magnus : 1. a great mother's brother

2. the husband of the mother's sister.

இந்த avanculus எனும் இலத்தீனச் சொல்லினின்றே (aunnculum > (shortened form) unculum) > uncle எனும் ஆங்கில வழக்கும் தோன்றியது!

(காண்க: A Latin Dictionary (Lewis & Short) 352 . Avun–culus Avun–clavis) = a mother's brother.

தாயின் கிளையாக உடன் பிறந்தவன் Avunclavis > Avunculus > (French) oncle

(Eng.) uncle

இந்த **“uncle”** என்ற சொல், - இன்று அப்பாவின் உடன்பிறந்தானாகிய சிற்றப்பனையும் (சித்தப்பாவையும்) - அம்மாவின் உடன்பிறந்தானாகிய மாமனையும் - அம்மாவின் தங்கையின் கணவனையும் குறித்துப் பலபடிநிலைகளில் குழப்பி விளிக்கப்பெறுகின்றது!

இலத்தீன வடிவங்களாக Avun (Auon) என்னும் சொற்பாங்குகளினின்றே, “Aunt” எனும் சொல்லும் ஆங்கிலத்துள் ஏற்கப்பெற்று மாமனின் மனைவி (uncle’s wife) - அப்பாவின் உடன் பிறந்தாளாகிய அத்தை - பெரியம்மா - சின்னம்மா (சிற்றாய் > சித்தாய் > சித்தா > சித்தி) என்ற வாறாகும் இன்னின்னவரையும் குறித்து வழங்கப்பெற்று வருகிறது. விளியாகவும் பெயராகவும், (Aunt > ) Aunty என்னப்பெறுகின்றது! பரவலாக, விளிக்கப்பெற்று இளிக்கிறது!

அவ்வை என்பது அம்மையின் திரிபு. அவ்வை தாயே!

மூத்தோளையும் முதியோளையும் குறித்தமை, பின்னீட்டிலேயே!

வவ்வால் > வௌவால் ஆகும்.

கவ்வை > கௌவை ஆகும். (‘கவ்வை’ - குறள் : 1144) (‘கௌவை’ - குறள் :1147)

பவ்வம் > பௌவம் ஆகும்.

நவ்வி > நௌவி ஆகும். நவ்வி (= பெண்மான் - தொல்.பொருள். 612) நௌவி (மதுரைக்: 275)

கவ்வுளி > கௌலி ஆகும்.

**அவ்வை > ஔவை**

தமிழகத்தில் – கழகக்காலத்தில் ஏழு வள்ளல்கள் இருந்தனர்! பேகன் - பாரி - காரி – ஓரி - ஆய் – நள்ளி - அதியன் என எழுவரும் வள்ளல்கள்! அனைவரும் வேந்தர்கள் அல்லர்! குறுநில மன்னர்களே! வாய்ப்பு வளங்களுக்கு மேம்பட்டவாறு கொடைமடத்து நெஞ்சத்தவராக வாரி வழங்கிய பண்புசால் வள்ளல் பெருமக்கள், இவர்கள்!

அக்காலத்தே தான் - ஔவையார் என்னும் பெயரில் ஒரு திறப் பெருமாட்டி தமிழகத்தில் உலவினார்! தமிழகம் முழுமைக்கும் மதிப்பார்ந்த புகழ்நிலையை அக்கால் பெற்றிருந்தவர், இவர்! அக்கால் இத் தமிழகத்துள் வாழ்ந்த முப்பது பெண்பாற் புலவர்களில் - தலைமைப்புகழ் பெற்றிருந்த தாய், இவர்! அக்கால மூவேந்தர்களையும் ஒரேநேரத்தில் ஒன்றாயிருக்கக் கண்டு அவர்களை நேரிடையாகப் போற்றியவர்! (புறம் : 367)

அதியமான் நெடுமான் அஞ்சியின் நெஞ்சுக்குகந்த புலவர் பெருமாட்டி! அவனின் அவைக்களப்புலவர்! அக் குடும்பத்தொடு நீணெடிய தொடர்பு! அஞ்சியின் மகன் பொகுட்டெழுனியும் மதித்த நீடு தொடர்பினர்! அஞ்சியைப் பற்றிப் பன்னிரண்டு அரும்பாடல்களை அக்காலத்தில் பாடியவர். அக் குடும்பத்தைப் பற்றி அவர் யாத்தளித்த பாக்கள், பதினைந்து! கழக இலக்கியத்துள் அவரின் செழும்பாக்கள், 59 எனும் எண்ணிக்கையன! அத்துணையும் வயிரப்பதிவுகள்! ஆழ்ந்தகன்ற இலக்கிய நுண்மையன, அவை!

அவருக்குப் பிறகு, - ஐந்து ஔவையார்கள் தோன்றினர், என்பார் - அறிஞர் மு.அருணாசலம் ஐயா! (தமிழ்ப் பல்கலைக்கழகத்தே, என் நண்பர்களுள், இவரும் ஒருவர்!) சோழர்

காலமாகிய இடைக்காலத்தே சற்றேறக்குறைய - பத்தாம் நூற்றாண்டு அளவில் வாழ்ந்த ஔவையார் - தமிழகக் கல்வியுலகத்தில், - முந்தைய கழகப்பெரும்புலவராகிய அஞ்சியின் ஔவையார் பெற்ற புகழினுக்கும் மேலாக, - இன்றும் பெரும்புகழ் எய்திச் சிறந்துவரும், மாண்பினர், இவர்!

9-ஆம் நூற்றாண்டுச் சுந்தரர்க்குப் பின்னாகவும் – 12-ஆம் நூற்றாண்டு இளம்பூரணர்க்கு முன்னாகவும் இவர் வாழ்ந்திருக்கலாகும் அமைவை, அறிஞர் தமிழண்ணல் சுட்டிக்காட்டுவார்!

இவ் இடைக்காலத்து ஔவையாரே - ஆத்திசூடி - கொன்றைவேந்தன் - மூதுரை - நல்வழி எனும் நான்கு அறநூல்களை இயற்றி அளித்தவர்! சிறியார்க்கும் (சிறார்) - பெரியார்க்கும் ஒருங்கே உவப்பளிக்கும் பான்மையன, இவை! இவர், சிவநெறியர்! (கொன்றைவேந்தனும் - ஆத்திசூடியும் சிவனே என, அறிக!)

யாத்தமைத்துள்ள முறையில் - தொடக்கக்கல்வி பயிலப்புகும் சிறார்க்கு ஏற்ற வகைமையில் தொகுக்கப்பெற்றுள்ளது என்பது, இதனை இயற்றிய ஔவையார் நெடுங்கணக்கு வரிசையில் அமைத்துள்ளமையிற் புலனாகின்றது! இதனின் காலநீட்சி வெற்றிக்கு, இதுவும் ஒரு கரணியக் கூறு ஆகும்!

“தோழனோடும் - ஏழைமை பேசேல்” – “தேடாது அழிக்கின் பாடாய் முடியும்” என்பன போலும் மிகப்பல அறிவுறுத்தங்கள் எண்ணியெண்ணி மகிழத்தக்கன! இவை கொன்றைவேந்தனுள் வரும் கொடிமுந்திரிக் கனிகள்!

"சேமம் புகினும் யாமத்துறங்கு!..." என்ற கொன்றைவேந்தன் கனியைப் பார்த்துவிட்டு எனக்கு வியப்பும் அதிர்ச்சியுமே ஏற்பட்டன! காப்பு வினையேயாயினும் - நற்செயல் வினைகள் எதுவே ஆயினும், - நள்ளிரவுப் பொழுதாகிய யாமத்துள் சற்றுநேரமாயினும் உறங்கி ஓய்வெடுத்துக் கொள்! என்பது, எனக்கு எளிய அறிவுரையாகவே படவில்லை! (எனினும், நான் கேட்பதாக இல்லை!...)

உறுதியை - உள்ளுணர்வுச் செழுமையை - வருமுன் காப்பை – பண்பை – அறவொழுக்கத்தை – நாகரிகத்தை - நடக்கை முறையை - ஒருசேர வளர்த்தெடுக்கும் அருமணிகளின் களஞ்சியம், இவ் ஔவையாரின் நூல்கள்.

"தோற்பன தொடரேல்" – "உடையது விளம்பேல்" – போன்றவை, வாழ்வியல் எச்சரிக்கையால் விழிப்பிப்பன!... சுட்டித் தெளிவாக்குவன!

அவற்றுள் ஒரு சிறு வரியொன்றனை எடுத்துத்தான், - ஒரே ஒரு வரியினைச் சுட்டித்தான், நானும் ஓர் எச்சரிப்பையும் கொள்வனைக்குரிய (கருதுக: கொள்வனை – கொடுப்பனை) ஒன்றையும், - இதனுள்ளாக நிலைநிறுத்தியுள்ளேன்!

ஆத்திசூடியுள்ளாகும் "ஊக்கமது கைவிடேல்" என்பதொரு நெறிகுறித்த வரி! அதுவே – ஈண்டு, நூற்கருவரி! அதனை எத்துணை ( > எத்தனை) வகையுள் பிரிவுற நோக்கலாகும் என்பதற்கு ஒரு பட்டியற்பாட்டை ஈண்டு முன் வைத்துள்ளேன்! அப்பட்டியல், மேலும் விரிவுறல் கொள்ளத்தக்கது! அவையே சாலுவன என்பதால், சட்டெனவும் நிறுத்திக்கொண்டேன்!

நம் பண்டைய உரையாசிரியர் பலர்க்கும், அக்கால் ஒரு வழக்கமிருந்தமையை அவருரைகளிடையே சில்லிடங்களிற் காணலாகும்! பொழிப்பினை விளக்கிக்கொண்டே வருவார்கள்! விளக்கம் போதுமென விளங்கிய நிலையில், - தமக்கு மிகமிக விரிவாகத் துலக்கமிருப்பினும் அவ்விடத்தே மேலும் நீட்டாதேயே, துடுமெனத் தாமே நிறுத்தமுறுத்தி அடங்கிவிடுவர்! இதனைத் (தன் + தடுப்பு) > 'தற்றடுப்பு' எனலாம்! உள்ளடக்கமாகிய விளக்கப் பொழிப்புரையானது முற்றப்போதுவதே எனத்தாம் கருதி நிறைவுற்றால் மட்டுமே, அன்னவாறு அது நிகழும்!

நானும் அன்னவர் அமைவுறுமாறே, போதுவதிது என நிறுத்தி நிறைகின்றேன்!

(இக் - கட்டுரை நூலின் கருப்பகுதியாக உருப்பெற்றுள்ள "ஊக்கமது கைவிடேல்" - எனும் வரியொன்றனை 17 - பிரிவு எண்ணிக்கையுள்ளாகச் சொற்பிரிப்பீடு செய்து ( = சொற்பகவு) - அவற்றுக்கு உள்ளாகுனவாகும் அறுபான்பொருட்பாடுகளை (60) உங்கள்முன் கடைவிரித்துள்ளேன்!... (இது வீண்வேலை என எனக்கே பட்டது! எனினும், அதனை அடிப்படையாகச் சொல்லியாகவே வேண்டியதாயிற்று!)

ஏனெனில், நம்மவர்கள் பல்லவரும் இவ்வாறாகத் தானே, ஒன்றனை எடுத்துக் கொண்டு புய்த்துக் கிழித்து – உடைத்தறுத்து - நறுக்கித் தறித்து - நலித்துக் குலைத்து உளம் உலமருகின்றார்கள்; மறுகுகின்றார்கள் என்பதனை முன்வைக்கவே, இப் பட்டியல் நீள்வைப் பதிவு செய்தாக வேண்டி வந்தது!

'அடங்கல்' போதுவதென, இத்துடன் அடங்குகின்றேன்!

**(இன்றியமையாது குறித்தாக வேண்டியுள்ள இன்னுமொரு சிறு குறிப்பு: -)**

இந்நூலுடன் பிற்சேர்க்கையாக, - என்னின் முன்னை ‘அருஞ்சுவடி’ இணைக்கப்பெற்றுள்ளது!

47 - ஆண்டுகளுக்கும் முந்தைய என்னுடைய கீற்றுவரிகள், இவை! சூடியை ஒத்த பண்டைய ஆக்க வகைமையை அடியொற்றியது, இது! 17-6-2023-இல் அச்சீடு கொண்டது! இக் கருத்து நூலொடு - தேவைப்பாடு கருதி இதுவும் இணைவு கொண்டுள்ளது!

இச் சிற்றிணைப்பினுள்ளாக 264 கருச்செய்தி நெறிவரிகள் உள! ஒவ்வொரு தெறிப்பினுள்ளும் தெரிவுற வேண்டிய தக்க சில தீர்வுகள் உள!

இவ் இணைப்பு நூல், எவ்வகையில் பயனுறலாகும் என்பதனைத் தெரிவித்தற்கென, முன்னுள்ள ஒரேயொரு தொடக்க வரியினை மட்டுமே எடுத்து முன்னிறுத்தி, விரிவுப் பொழிப்புரையொன்றனை உடன் வரைந்துள்ளேன்!

இவ் வகையிலாகத் தக்க பயன்பாட்டு பொழிப்புரை நிறைவாக்கம் – என்னாலோ என்னன்னாராகலாகும் பிறராலோ மற்றுமுள்ள 263 குறுவரிகளுக்கும் வருங்காலத்தே நிகழலாகும்!

**இப் படிக்கு ஒப்பமாக...**



**(பேராசிரியர் அருளியார்)**

# ஓர் அருஞ்சிறு குறுவரி
# - அறிவும் புரிவும் தெரிவும்!...

### (அறுத்து - அறுத்து உலையேல்!)

(=அறுத்து அறுத்து உலையேல் = கூறுபடுத்திக் கூறுபடுத்திப் பார்த்து மனச்சுழற்சி அடையாதே..)
(மனச் சுழற்சி = மனக் கலக்கம்)

"நில-புலம்" என்னும் படியாக, உலகப் பயில்வில் வழங்கி வருவதனுள், "புலம்" என்பது, நிலத்தையே குறிக்கும்.

(:புலம் > (Russian) Pole = a field.

(German) yeld > (Anglo-saxon) folde = earth, land

> (Middle English) yeld

> (English) field = புலம்).

அதாவது, புறவெளியாகத் தெரிவுறும் நிலம், "புலம்" என்னப்பெற்றதாம்! ஒவ்வோர் ஆட்சிக்கும் உரியதாகிய இட எல்லை, அக்காலத்தில் "புல-வரை" என்றவாறு சுட்டப்பெற்றது.

புல வரை = நில எல்லை.

காண்க: "புல வரைத் தோன்றல்" (பதிற்றுப்:80:15)

**புல் : ஒளிக் கருத்துக் கிளைவேர்.**

வேர்வழி விரிவு கருதுக:

புல் > பொல் (பொல் + இ>பொலி-பொலி + உ> பொலிவு
= ஒளியுடைமை; அழகுடைமை).

பொல் > பொன் = பொலிவுடையதாகிய தங்கம்.

பொல் + அம் + காசு > பொலங்காசு (அகம். 269:15)

காண்க : பொலங்குழை (பெரும்பாண் : 312);
பொலஞ்செய் காசு (புறம்: 53:2); "பொலந்தேர்" ( அகம்:25:20; புறம்: 4:14; 151:7) = பொன்னாலாகிய தேர், பொற்றேர்.

பொல் + அம் + தொடி > பொலந்தொடி - பொன் வளையல் (= பொற்றொடி (நற்: 258:5).

பொல்+ல்+ஆ>பொல்லா= பொலிவில்லாத > அழகில்லாத). பொல்லாச்சிறகு = அழகில்லாத சிறகு (இடைக்காலப் பாடலொன்றன் அழகிய வரியுள் வரும் கூட்டுச்சொல், ஈண்டுக் கருதிப் பார்க்கத் தக்கது!

"கான மயிலாடக் கண்டிருந்த வான்கோழி தானும் அதுவாகப் பாவித்துத் தானும் தன் பொல்லாச் சிறகை விரித்தாடினாற் போலுமே" அழகற்ற ஒன்று கொடுமையானது என்றவாறான அழகியல் கருத்து நோக்கிலேயே (Aesthetic view) "பொல்லா" எனும் சொல், "கொடுமை வாய்ந்த" என்றவாறு பொருள்விரிவாக்கம் எய்தியது. (மேலுங்காண்க : "பொல்லா வறுமுலை" (புறம்: 164:4) (பொல்லா = பொலிவற்ற).

புல் > புல் + அர் > புலர்: ஒளிபெற்றுத் திகழ..

"புலர் விடியல்" (பரிபாடல் : 11:6). "புலர்ந்து விரிவிடியல்" (மதுரைக்காஞ்சி : 664).

புல் + அர் > புலர்      புலர் + இ >புலரி.

"புலரி விடியல்" (மலைபடு : 448; புறம் : 385:2)

புல் + அம் > புலம் = ஒளி பொருந்தியதாகிய அறிவு.

புல் + அவு > புலவு > புலவு + அர் > புலவர் = அறிஞர்.

தமிழரின் அறிவு நோக்கில் - ஒளிக்கருத்து அறிவுக் குரியதாகவும் கருதி வழக்கில் மேம்பட்டது.

(ஒப்பு நோக்குக்கு:) ஒளி =அறிவு,

"நின்ற ஒளியோடு ஒழுகப் படும்" (குறள் : 698)

ஒள்ளியவர் = அறிஞர் (குறள்:714).

ஒள் +பு > ஒட்பு. ஒட்பு + அம் > ஒட்பம் = அறிவுடைமை (காண்க : குறள்கள் : 404,425).

புல் + அம் > புலம் = (ஒளி பொருந்தியதாகிய அறிவுடைமை) அறிவு.

புல வரை = அறிவின் எல்லை (நில வரை = நிலத்தின் எல்லை; ஆள்புலத்தின் எல்லை)

"நிலவரை இறந்த குண்டு கண் அகழி" (புறம்.: 21:2)

"நில வரைத் தாங்கிய நிலைமையின் பெயரா" (பரி.: 15:2)

புல வரை: அறிவு எல்லை.

1. "புல வரை அறியாப் புகழொடு பொலிந்து" (பரிபாடல்:15:1)

   (=அறிவின் எல்லையால் அறியப்படாத புகழுடனே பொலிந்து...)

2. "புல வரை இறந்த புகழ்சால் தோன்றல்" (புறம்:21:1)

[புலம்: அறிவு, புலம் > புலன். (மகர - னகரத் திரிபு)

(ஒ.நோ.: திறம் >திறன். உரம் > உரன்.

வளம் > வளன். குலம் > குலன்)

புலன்: அறிவு

1. "புலன் அழுக்கற்ற அந்தணாளன்" (புறம்:126:11)

(அறிவில் மாசற்ற பார்ப்பனனாகிய கபிலன் என, மாறோக்கத்து நப்பசலையார் சுட்டியுள்ளமையில் ஒரு நுண்ணிய உட்குத்து உள்ளமை கூர்ந்தெண்ணத் தக்கதாம்!)

ஈராயிரம் ஆண்டுக்கும் முற்பட்ட - தமிழகத்துள் வந்தேறி வதிந்து திரிந்த அந்தணர் எனும் பெயரினை வெற்றுக்காய்ப் பற்றிக் கொண்டிருந்த ஆரியப்பார்ப்பனருள் பெரும்பான்மையரும் - மன அழுக்கும், அறிவுக்கசடும் வாய்ந்த இழிவியல்பினராக ஈண்டு இயங்கினர் என்பதற்கான சான்று வரியாகவும், இது பதிவுசெய்யப் பெற்றுள்ளமையைக் கூர்ந்தாழ்ந்து நோக்கின் துலங்க விளங்கிக் கொள்ளலாகும்!

2. "புலன்உழுது உண்மார்" (புறம்: 46:3)

(:அறிவால் உழுது உண்போராகிய புலவர் பெருமக்கள்...)

எதற்கும் ஓர் எல்லையுள்ளது! எந்தச் சிந்திப்புக்கும் ஒரு வரையறை வேண்டும்! எண்ணுவதில் முறைவேண்டும்! நெறி வேண்டும்! அளவு வேண்டும்!

அளவு = வரையறை (காண்க : குறள்: 224; 474; 848; 943, 947, 949).

அளவு = எல்லை (காண்க : குறள் : 283, 477, 478, 479)

அளவு= அளத்தலாகிய நெறி (குறள் : 286)

“அளவுக்கு விஞ்சினால் அமுதமும் நஞ்சு" என்பது தெளிவும் - பட்டறிவும் செறிந்த ஒரு பழம்பழமொழி! அளவுக்கு மீறிச் சிந்தித்தால், பிழையான முடிபே தீர்வாய் வரும்! சிந்திப்பில் - எண்ணத்தில் ஒரு "புல- வரை” (-அறிவு எல்லை) வேண்டும்! இந்த நிலையைக் கடந்தே, மிகப் பலரும் சிந்தித்துக் கலங்குகின்றார்கள்; உரிய தீர்வெய்த மாட்டாது திணறுகின்றார்கள்!

சற்றேறக்குறைய ஐந்நூறு ஆண்டுகள் அளவிடையிலாக (மிகப் பிற்காலத்து-) ஔவையார் என்னும் பெயரிய ஆசிரியை ஒருவரால் யாக்கப்பெற்று, நம் தமிழ்மக்களால் நன்கு பரவலாகத் தொடர்ந்து பயின்றுவரப்பெற்ற பயன் நூல்களுள் - ஆத்திசூடி,

கொன்றைவேந்தன், மூதுரை, நல்வழி எனும் நான்கும் சிறக்கக் குறிக்கத்தக்கன! அரிய - தெள்ளிய - துலக்க -நுணுகிய அறிவுச்செய்திகள் அடங்கிய இனிய நூல்கள், இவை! மனப்பாடத்திற்கு உகந்தவை! உருப்படப் பயன்படுபவை!

இவற்றுள் புல - வரை மீறிய சிந்திப்புகள் எவை எவையெனத் தெளிய "ஆத்திசூடி' (ஆத்திச்சூடி என்பது, கடுங்கொடு மிகைப் பிழை!) எனும் குறுநூலுள் உள்ள அருஞ்சிறு குறுவரியொன்றனை எடுத்துக் கூறுபடுத்திப் பார்க்கும் முயல்வு வினையே, இக் குறுங்கட்டுரை!...

“ஊக்கமது கைவிடேல்"என்பது, ஆத்திசூடியுள் ஒரு கருத்து வரி! இவ் வரியொன்றனை எடுத்து அறுத்துப்பார்த்து அகம் மயக்குறலாம்; வாருங்கள்! அறுதியில், மனம் மயக்கறலாம்; தேறுங்கள்!

இதற்கும் முன்னீடாக - இவ் வரியினுள் வரும் சொற்கள் சிலவற்றின் பொருள் விளக்கங்களுள் படிந்து மேற்செல்லுவது, தேவையானதாகும்! அப்படிப் பார்க்க வேண்டிய சொற்களாகுவன:

"ஊக்கு - ஊக்கம் – அது – மது – மதுகை - கை - விடு - கைவிடு - ஏல்" ஆகியன (9 சொற்கள்)

**(1-2) ஊக்கு : ஊக்கம்**

(வளர்ச்சி முறை:) உ>உய்>உய்கு >உகு > உக்கு>ஊக்கு

2. முன்மைச் சுட்டு (மேன்மைச் சுட்டு)

உய்=மேற்செல்! (மேல் ஏறுவதன் வழியே தப்பித்துக்கொள்!)

உய் +தி > உய்தி = தப்பிப்பு ; பிழைப்பு

உய் + அர் > உயர் = மேலேறு.

உய் + கு> உய்கு > உகு.    உகு + ஐ > உகை = மேற்செல்.

உகைத்தல் = எழும்புதல்.    "பலபுரவி நீறுகைப்ப”

(மதுரைக்: 284)

எழுதல் (கலிங்கத்துப்பரணி : 342)

உயரவெழும்புதல் (பாரதம். நிரைமீட்: 41)

உகு > உக்கு = உயர்ச்சி: முடி

உக்கு + அம் > உக்கம் = (உரியினைக் -) கட்டித் தூக்கியெடுக்கவுதவும் கயிறு (கலி: 94:17-18)

உக்கு > ஊக்கு = மேலுயர்த்து; எழுப்பு; தூக்கு; உயரச் செய், உயரச்செலுத்து; உயரத்துப்போகுமாறு அசைவுறுத்து.

"ஐய, சிறிது என்னை ஊக்கியெனக் கூறத்

தையால் நன்றென்று அவன் ஊக்க...” (கலி:37:13-16)

ஊக்கு + அம் > ஊக்கம் = உயர்ச்சி (சூடாமணி நிகண்டு)

ஊக்கம் = மனவெழுச்சி; உயர்ச்சிக்கான முயற்சி.

“ஊக்கம் உடையான்" (குறள்: 486)

"ஊக்கம் அழிந்து விடும்" (குறள் : 498)

**3.அது :**

அ > அது: சேய்மைப்பொருட் சுட்டினின்று உருவாக்கப் பெற்ற பகுதிப்பொருள் ஈறு

(அது என்பது, அஃறிணை ஒருமைச் சேய்மைச் சுட்டாகவும் உடைமைப் பொருள் தரும் ஆறாம் வேற்றுமை உருபாகவும் இயங்க வல்லது!).

**4. மது :**

மய் : கருமைக் கருத்து மூலவேர். மய் > மை = கருமை

"மைம்மலர்"=கருமலர் (சிலம்பு:28:15) மை = கரிய மை.

மை=கரிய முகில். "மைசூழ் வெற்பின் மலை"

(நற்: 214:7)

(:கருமைக் கருத்து > இருண்மைக் கருத்து > புலனழிந்து இருட்படுங்கருத்து > மயக்கக் கருத்து)

மய்+அகு > மயகு> மயங்கு

மயங்குதல் = (கருமையாதல்>) இருள் சூழ்தல் (குறுந்:171: 1)

மயங்குதல் = மனம் கருமையுறுதல் (குறுந்:374:1).

மயங்குதல் = மயக்கங்கொள்ளுதல் (நாலடி : 327:2-3)

மய் > மயகு > மயக்கு > மயக்கு +அம்> மயக்கம்

(கருமையூறு >) மனக்கிறக்கம்.

மய்+ய் + அல் > மய்யல் > மயல் = மயக்கம் (குறுந்: 156:7)

மய் > மய்து > மது = மயக்கந்தருவதாகிய கள்.

"மான் குறையொடு மது மறுகவும்" (பொருந:217)

மயக்கந் தருவதாகிய தேன். "மதுவின் குடங்களும்"

(சிலம்பு: 25:38)

மது (Greek) methu = wine (மது > mets)

methu = wine (Homer. only in hom and acc.)

methu paineto. (Ili: 9:469) (ody: 4:746)

methuos =(first in pl.) (Epigr: 22. Nic. Th: 582 marc. sid: 50)

(Greek) methudotess =மது வழங்குநர்; மது தருநர்,

Methumnaiss = மதுக் கடவுள்

methusis = குடி மயக்கம்.

methusma = மயக்கந்தரும் மது.

methustear =குடிகாரன்; மதுவெறியன்.

மது > (Greek) methu > (Lithvanian) midus

> (old slavonic) medu > (Welsh) medd

> (old Irish) mid > (Common Germanic) medhug

>(Gothic) midus > (old Norse) Mjoor

>(old High German) metu, mitu

> (Middle Low German) medu, meodu)

(English) mead.

(English) mead: drink made by fermenting a mixture of honey and water.

**5.மதுகை**

மய் > மய்து > மது: (மயக்கம் > களிப்பு)

மது + கை > மதுகை: (மயக்கம் > களிப்பு ) வலிமை

மதுகை: 1.வலிமை (அகம்: 71:15; புறம்:325:10, நாலடி: 65:3)

2. வலிமையின் பெருமை (அகம்: 125:12)

3. ஆற்றல் (அகம்: 279:14).

4. மனவலிமை (புறம்: 14:5-6).

5. வலிமை காரணமாக உண்டாகிய செருக்கு (பரிபாடல்: 18:1)

**6. கை**

இய் > இய் +அ>இய > இய +கு > இயகு > இயங்கு (இயகு > இயக்கு).

இய் + அல் > இயல்     இயல் +து > இயற்று = செய்

இய் >எய்>     எய் > செய் (முன்மிகை)

செய்+அல்>செயல்=வினை.செய்+ கை > செய்கை = செயல்.

செய் > கெய் > கய் >கை.

வினைபடுவதற்குரிய இன்றியமையா உடலுறுப்பு என்னும் பொருளிலேயே, "கை" என்னும் சொல், நம் தமிழில் உருவாக்கப்பெற்றுள்ளது!

கை > (Greek) Khei; Kheir = hand.

Kheir (hand) + ergon (work). handiwork

Kheirourgos > Kheirurgia > Kheirrurgia > (Latin)

chirurgia > (old French) Sirurgerie > surgerie

(M.E.)+ery > surgery = கையால் செய்யப்பெறுவதாகிய அறுவை மருத்துவம்.

(Greek) Kheirurgia > (Latin) chirurgia

> (old French) Sirurgie > Sirurgien, serurgien

> (AF) Surgien > (Middle English) surgeon

(English) surgeon = அறுவை மருத்துவன்.

(Greek) Khei(r) > cheir = hand > English) cheiro, chiro. Combining form denoting hand.

கை 1. வினை செய்யும் அடிப்படை யுறுப்பு

2. வினை; செயல் (கையறவு = செயலற்ற நிலை)

3. ஆற்றல்

(கை: ஒரு தொழிற்பெயர் ஈறு)

கை என்னும் சொல் செய் என்னும் (செயல்) வினைப் பொருட்பாட்டைக் கொண்டது என்னும் அடிப்படையிலேயே, தமிழில் இது ஒரு தொழிற்பெயர் ஈறாகவும் நிலைகொண்டது.

(ஒ.நோ.: செய்+கை>செய்கை, வரு + கை > வருகை;

நில் + கை > நிற்கை.

அணை > அணைக்கை, பார்+க்+ கை > பார்க்கை...)

கை : (உறுப்பு வழியே..)

4. கைப்பொருள். "கையற்ற கண்ணே யறும்"(நாலடி: 371)

கை: (நற்செயல் வழியே...)

5. ஒழுக்கம். "கையமை விளக்கம்" (முல்லை: 49)

**கய் = (மென்மைக் கருத்து வேர்)**

"கய என் கிளவி மென்மையும் செய்யும்"

(தொல்.சொல்.உரி : 26)

(ஒ.நோ.:) "கயந்தலை", "மடப்பிடி" (நற்: 137)

6. கய் = மென்மை

கய் > (மென்மை) சிறுமை.

7. கய் > கை = சிறுமை

"கைஞ் ஞானம் கொண்டொழுகும் காரறிவாளர்"(நாலடி:311)

8. கை = நுண்மை

("கற்றது கைம் மண்ணளவு கல்லாதது உலகளவு"–

பழமொழி.

கைம்மண் = நுண்ணிய சிறுமண் (கையளவு மண் அன்று)

9. கய் > கை = கருமை

கய் : கருமைக் கருத்து வேர்.

கய் > காய் > காயா = கருமலர்

(கருமைக் கருத்து> குற்றக் கருத்து)

10. கை = குற்றம்

கய் > கை = குற்றம். (அகராதி நிகண்டு)

**7. விடு:**

வய்: பிரிவுக் கருத்து வேர். (பிளவுபடற்கருத்து)

வய் > வெய்>விய் = விரிவு; பிரிவு; பிளவு

விய் > வீய் > வீ = நன்கு விரிவெய்திப் பிரிந்து வீழ்ந்த மலர்.

- விய் >விய்ல் > வில் > விள் (பிரிவுக் கருத்துக் கிளைவேர்)

விள் + து> விட்டு  விட்டு>விடு=பிரி, பிரிவுறு, பிள, நீங்கு

விடு +அல்>விடல் = பிரிகை.

"தீர்தலும் தீர்த்தலும் விடற்பொருட்டு ஆகும்"

(தொல்.சொல்.உரி: 24)

விடு + அர் > விடர் = நிலப் பிளப்பு: நிலப் பிளவு, வெடிப்பு

விடுதல் = பிரிதல்; பிரித்தல்; ஏவுதல்.

விடு > விடு+ஐ> விடை = கேள்விக்கு மறு மொழியாக விடுக்கும் விளக்கம்  "விடு மாற்றம்" (குறள் : 689:1)

**8. கைவிடு = விட்டு ஒழி.**

"பெரியோர் கண்டு கைவிட்ட மயல்" (நாலடி:43)

கைவிடல் ஏற்காதொழிதல் (குறள் : 450: 1245), விட்டு நீங்குதல் (குறள்:79)

கைவிடுக = ஒழிக  (குறள் : 928)

**9. ஏல்**

இய் = பொருந்துதற்கருத்து வேர்.  இய் + அல் > இயல் = பொருத்தம்; கூடுகை.

இயல் > ஏல் = பொருத்தம்.  "மாலை ஏலுடைத்தாக... அணிந்தும்" (திருவாச. 2:114).

ஏல் = பொருந்து,  ஏல்+தல் > ஏற்றல் = எதிர்கொள்ளுதல்; ஒப்புக்கொள்ளுதல்; மேற்கொள்ளுதல்.

ஏல் - ஏற்றுக்கொள்; (<பொருந்து)

10. ஏல் - மறு

அல் > அன் > அன் + று > அன்று = இல்லை

[அல்: எதிர்மறை ஏவல் ஒருமை ஈறு

"இளங்கொடியே இடர் எய்தல்" (திருக்கோவை: 15)

எய்து +அல்> எய்தல் = எய்தாதே]

(எதிர்மறை அடிப்படை) அல் > ஆல் >(யால்)>யேல் >ஏல்

ஒ.நோ.(யான் > யேன் > ஏன் >என்)

யா > யா + அன் > யான் > யான் + அம் - யானம் > யேனம் > ஏனம் : கரும்பன்றி

**ஏல்: எதிர்மறை ஏவல் ஒருமை ஈறு**

Negative imperative singular ending.

(கருதுக : கரவேல் - விளம்பேல் - இகழேல் - ஒழியேல் -சுருங்கேல் - சொல்லேல் - மறவேல்-திரியேல்- கொடேல் - பிரியேல் -நுகரேல்).

இயல்பாய்ப் பொருள்கொள்ளவேண்டியதனை, ஓர் எல்லைக்கும் மேலாகச் சென்று உட்பொருள் காணுகின்றோம் என்கின்றபடியான போக்கில் - கருத்துவரி ஒன்றனை, - அறுப்புக்கும் மேலாக அறுத்து மிகையுற எண்ணி மனச்சுழற்சி அடையலாகாது என்பதற்காகவே, ஒரேயொரு சான்று வரியை மட்டும் முன்வைத்து இக் கட்டுரை வரையப் பெறுகின்றது!

உரிய ஓர் எல்லைக்கும் மேலாகச் சிந்திப்பது - மனச்சிதைவையே நல்கிக் குலைக்கும் !...

முறையிலாது, எவ்வெவ்வாறெலாம் ஒன்றனைப் பிறழச் சிதைப்பின் உளங்கலக்குறுத்தல் எய்தலாகும் என்பதற்குரிய

எடுத்துக்காட்டுக்காகவே-ஆத்திசூடியின் ஆறாங்குறுவரியாகிய அழகிய ஓர் அறிவுநெறி, ஈண்டு முன்வைக்கப் பெற்றுள்ளது!

உடைக்க - உடைக்க, அறுக்க - அறுக்கக் கருத்து வரியொன்று,எப்படியெப்படியெல்லாம் பல பொருண்மைகளையும் விசிறலாகத் தூற்றும்!... மயக்குறுத்தும்!... என்பதனைத் தொடர்ந்து காணலாம்!... வாருங்கள்!...

## "ஊக்கமது கைவிடேல்!"

1.ஊக்கம் +அது + கைவிடேல்

1. (ஊக்கம் = மனக் கிளர்ச்சி; உள்ளக் கிளர்ச்சி
(பதிற்றுப்பத்து : 68:7)
மனக்கிளர்ச்சி (அதாவது, உள்ளக் கிளர்ச்சி)
- அதனைக் கை விட்டுவிடாதே!
2. (ஊக்கம் : இயல்பெழுச்சி (காண்க : பிங்கலம்: 1792)
உள்ளத்துள் இயல்பாயெழும் தூண்டல் உணர்வு -
அதனைக் கை விட்டுவிடாதே!
3. ஒரு செயலினை நீ செய்வதற்கெனப் பிறர்தரும்
துணைதரவு - அதனைக் கை விட்டுவிடாதே!
4. (ஊக்கம் = வலிமை. "ஊக்கம் உடையான் ஒடுக்கம்"
(குறள் : 498)
வலிமை, - அதனைக் கை விட்டுவிடாதே!
5. (ஊக்கம் = மேற்கொண்ட எண்ணம்)
("இடம்சிறிது என்னும் ஊக்கம் துரப்ப”)
(புறநானூறு : 8:3)

உள்ளத்தில் மேற்கொண்ட எண்ணம் எதுவோ,-
அதனைக் கை விட்டுவிடாதே!

6. (ஊக்கம் = முயற்சி.

"உள்ளம் உளை எழ ஊக்கத்தான உள்ளுள் பரப்பி"
(பரிபாடல் :10:66)

உள்ளத்திலெழுந்த முயற்சி எதுவோ - அதனைக் கை
விட்டுவிடாதே!

7. (ஊக்கம் = உயர்ச்சி (கம்பராமாயணம்: 1:33:32)
உயர்ச்சி-அதனைக் கை விட்டுவிடாதே!

8. (ஊக்கம் மிகுதி "அமலை.... ஊக்கம்.... பொங்கல்
மிகுதி" (பிங்கலம் : 2232)
மிகுதியாகிய அதனைக் கைவிட்டு விடாதே!

9. (ஊக்கம் = உண்மை, "ஊக்கமாய் எம்பிரானுக்கு உயிர்த்
துணையாய்..." (நந்திவனப் புராணம்: 173)
உண்மையாகிய அதனைக் கை விட்டுவிடாதே!

**2. ஊக்கம் +அது + கைவிடு + எல்**

10. மனக்கிளர்ச்சி (அதாவது, உள்ளக் கிளர்ச்சி) அதனைக் கை
விட்டுவிடுயாக (இதனை -) ஏற்பாயாக!
11. உள்ளத்தில் இயல்பாயெழும் தூண்டல் உணர்வு –
அதனைக் கைவிட்டு விடுவாயாக! (இதனை -) ஏற்பாயாக!
12. ஒரு செயலினை நீ செய்வதற்கெனப் பிறர் தரும் துணை
தரவு-அதனைக் கைவிட்டு விடுவாயாக!
(இதனை -) ஏற்பாயாக!
13. வலிமை -அதனைக் கைவிட்டு விடுவாயாக!
(இதனை -) ஏற்பாயாக!

14. உள்ளத்தில் மேற்கொண்ட எண்ணம் எதுவோ -அதனைக் கைவிட்டு விடுவாயாக (இதனை -) ஏற்பாயாக!

15. உள்ளத்தில் எழுந்த முயற்சி எதுவோ -அதனைக் கை விட்டுவிடுவாயாக! (இதனை -) ஏற்பாயாக!

16. உயர்ச்சி-அதனைக் கை விட்டுவிடுவாயாக!

(இதனை-) ஏற்பாயாக!

17. மிகுதியாகிய அதனைக் கை விட்டுவிடுவாயாக!

(இதனை -) ஏற்பாயாக!

18. உண்மையாகிய அதனைக் கை விட்டுவிடுவாயாக!

(இதனை-) ஏற்பாயாக!

**3. ஊக்க+மது + கைவிடேல்**

19. ஊக்கந் தருவதாகிய தேனினைக் கை விட்டுவிடாதே!

(மது = தேன்)

20. ஊக்கந் தருவதாகிய கள்ளினைக் கை விட்டுவிடாதே!

**4. ஊக்க + மது + கைவிடு + ஏல்**

21. ஊக்கந் தருவதாகிய தேனினைக் கை விடுவாயாக!

(இதனை - )ஏற்பாயாக!

22. ஊக்கந் தருவதாகிய கள்ளினைக் கை விடுவாயாக! (இதனை -) ஏற்பாயாக!

**5.ஊக்க(ம்) + மதுகை + விடேல்**

23. ஊக்கந் தருவதாகிய வலிமையினை விட்டுவிடாதே!

(23.2) ஊக்கந் தருவதாகிய வலிமையின் பெருமையினை விட்டுவிடாதே!

24. ஊக்கந் தருவதாகிய ஆற்றலாந் திறத்தினை விட்டுவிடாதே!

25. ஊக்கந் தருவதாகிய மனவலிமையினை விட்டுவிடாதே!

26. ஊக்கந் தருவதாகிய - வலிமைகாரணமாக உண்டாகும் செருக்கினை விட்டுவிடாதே!

**6. ஊக்க(ம்) + மதுகை + வீடு + ஏல்**

27. ஊக்கந் தருவதாகிய வலிமையினை விட்டுவிடுவாயாக! (இதனை) ஏற்றுக் கொள்ளுவாயாக!

28. ஊக்கந் தருவதாகிய வலிமையின் பெருமையினை விட்டுவிடுவாயாக! (இதனை -) ஏற்றுக் கொள்ளுவாயாக!

29. ஊக்கந் தருவதாகிய ஆற்றலாந் திறத்தினை விட்டுவிடுவாயாக! (இதனை-) ஏற்றுக் கொள்ளுவாயாக!

30. ஊக்கந் தருவதாகிய மனவலிமையினை விட்டுவிடுவாயாக! (இதனை -) ஏற்றுக் கொள்வாயாக!

31. ஊக்கந் தருவதாகிய வலிமை காரணமாக உண்டாகும் செருக்கினை விட்டுவிடுவாயாக! (இதனை-) ஏற்றுக் கொள்ளுவாயாக!

**7. ஊக்க(ம்) + மது + கை + விடேல்**

32. ஊக்கம் தருவதாகிய மது, கைப்பொருளாகும்! அதனை விட்டுவிடாதே!

33. ஊக்கம் தருவதாகிய மது, ஆற்றலாகும்! அதனை விட்டுவிடாதே!

34. ஊக்கம் தருவதாகிய மது, ஓர் ஒழுக்கப் பொருளாகும்! (அதனை -) விட்டுவிடாதே!

35. ஊக்கம் தருவதாகிய மது, ஒரு சிறுமையாகும்! (அதனை -) விட்டுவிடாதே!

36. ஊக்கம் தருவதாகிய மது, ஒரு குற்றமாகும்! (அதனை -) விட்டுவிடாதே!

**8. ஊக்க(ம்) + மது + கை + விடு + ஏல்**

37. ஊக்கம் தருவதாகிய மது. கைப்பொருளாகும்! அதனை விட்டுவிடுவாயாக! (இதனை -) ஏற்பாயாக!

38. ஊக்கம் தருவதாகிய மது, ஆற்றலாகும்! அதனை
விட்டுவிடுவாயாக!  (இதனை -) ஏற்பாயாக!

39. ஊக்கம் தருவதாகிய மது. (ஓர்) ஒழுக்கப் பொருளாகும்!
(அதனை) விட்டுவிடுவாயாக! (இதனை) ஏற்பாயாக!

40. ஊக்கம் தருவதாகிய மது (ஒரு-)சிறுமையாகும்!
(அதனை) விட்டுவிடுவாயாக! (இதனை -) ஏற்பாயாக!

41. ஊக்கம் தருவதாகிய மது. (ஒரு) குற்றமாகும்!
(அதனை -) விட்டுவிடுவாயாக! (இதனை -) ஏற்பாயாக!

**9. ஊக்கம் +அது + கை + விடேல்**

42. ஊக்கமாகிய அது ஒழுக்கம் ஆகும்; அதனை விட்டுவிடாதே!

**10. ஊக்கம் +அது + கை + வீடு + ஏல்**

43. ஊக்கமாகிய அது ஒழுக்கம் ஆகும்; அதனை
விட்டுவிடுவாயாக!  (இதனை -) ஏற்பாயாக!

**11. ஊக்கு +அம் + மது + கைவிடேல்**

44. ஊக்குவாயாக! அந்த மதுவாகிய கள்ளினைக் கைவிட்டு
விடாதே!

45. ஊக்குவாயாக! அந்தத் தேனினைக் கை விட்டு விடாதே!

**12. ஊக்கு + அம் + மது + கைவிடு + ஏல்**

46. ஊக்குவாயாக! அம் மதுவாகிய கள்ளினைக்
கைவிட்டுவிடுவாயாக!   (இதனை -) ஏற்பாயாக!

47. ஊக்குவாயாக! அந்தத் தேனினைக் கைவிட்டுவிடுவாயாக!
(இதனை -) ஏற்பாயாக!

**13. ஊக்கு + அம் + மதுகை + விடேல்**

48. ஊக்குவாயாக! அந்த வலிமையினை விட்டுவிடாதே!
49. ஊக்குவாயாக! அந்த வலிமையின் பெருமையினை விட்டுவிடாதே!
50. ஊக்குவாயாக! அந்த ஆற்றலினை விட்டுவிடாதே!
51. ஊக்குவாயாக! அந்த மனவலிமையினை விட்டுவிடாதே!
52. ஊக்குவாயாக! அந்த வலிமை காரணமாக உண்டாகிய செருக்கினை விட்டுவிடாதே!

**14. ஊக்கு + அம் + மதுகை + விடு + ஏல்**

53. ஊக்குவாயாக! அந்த வலிமையினை விட்டுவிடுவாயாக! (இதனை -) ஏற்பாயாக!
54. ஊக்குவாயாக! அந்த வலிமையின் பெருமையினை விட்டுவிடுவாயாக! (இதனை -) ஏற்பாயாக!
55. ஊக்குவாயாக! அந்த ஆற்றலினை விட்டுவிடுவாயாக! (இதனை -) ஏற்பாயாக!
56. ஊக்குவாயாக! அந்த மனவலிமையினை விட்டுவிடுவாயாக! (இதனை -) ஏற்பாயாக!
57. ஊக்குவாயாக! அந்த வலிமை காரணமாக உண்டாகிய செருக்கினை விட்டுவிடுவாயாக! (இதனை -) ஏற்பாயாக!

**15. ஊக்கு +அம் + மது + கைவிடேல்**

(அம்: அழகிய காண்க: (ஐங்குறு: 49; கலித்: 83:26)

58. ஊக்குவாயாக! அழகிய மதுவினைக் கை விட்டுவிடாதே!

**16. ஊக்கு + அம் + மது + கைவிடேல்**

(அம் - நீர். காண்க: சேரமான் பெருமாள்

பொன்வண்ணத்தந்தாதி :3) வெங்கைக் கோவை:35)

59. ஊக்குவாயாக! நீர் மதுவினைக் கை விட்டுவிடாதே!

**17. ஊக்கு + அம் + மதுகை + விடேல்**

(அம் உள்; அகம் என்பதன் இடைக்குறை.

காண்க : ஐங்குறுநூறு: 20; குறுந்தொகை : 2)

60. ஊக்குவாயாக! உன் உள் - உள்ளதாகிய அகவலிமையினை விட்டுவிடாதே!

..........................................................

: இவ்வாறு - குறித்த ஒரு வரியை,- முறை பிறழ்ந்து கூறுபடுத்திப் பார்க்கும் பிழைப் போக்கானது. - மேற்குறித்தவாறாகப் பல்கி விரிவார்ந்துள்ள அறுபது (60) எண்ணிக்கைக்கும் மேற்பட்ட பொருட்பாட்டுக் குழப்பத்திற்கே இட்டுச்சென்று இடறி விட்டுவிடும்!... என்பதை, யாவரும் உணரவேண்டும்!

**ஊக்கமது கை விடேல்! ஊக்கமாகிய அதனைக் கைவிட்டுவிடாதே!** (:ஊக்கமாகிய -துணிவினைப் பற்றியவாறே இயங்கு!) இது மட்டுமே ஈண்டுக் கருத்தாகக் கொள்ள வேண்டியதாகும்!

இதனை, அறுத்து -அறுத்து உள்நுழைந்து பலபடிகளிலாகப் பார்ப்பது - இயல்பான புலவரையை அதுவாவது அறிவுவரம்பையே மீறுவதாகும்! இம் மீறலோடுதான் மிகப் பலரின் பார்வையும் உள்ளநிலையை மிகப்பரவலாகப் பார்க்கின்றோம்!....

குழப்பபடிக்கு இட்டுச் செல்வதாகிய அடாநிலைப் போக்கு - அறிவின் எல்லை மீறுவதில்தான் உள்ளது!

எல்லையோடு எண்ணுவோம்! எதனையும் எல்லைவரை சென்று, தீர எண்ணித் தீர்மானிப்போம்! தெளிவொடு திகழ்வோம்!...

பேதைமையுளெல்லாம் மேந்தலைப்பட்ட பெரும்பேதைமை என்பது - எஃதெனின், இம் மேற்குறித்தவாறான தாறுமாற்றுத் தவறுகளாகப் பொருட்பாடுகளுறும் முறைபிறழ்வான பிரிப்புகளாக அறுத்துப்பார்க்கும் பேதைமையேயாகும்!

எல்லை மீறின் தொல்லை ஆரும்! (ஆரும் = மிகும்; பெருகும்)

எல்லையுறுதல் தொல்லையறுதல்!

தொல்லைகள் கெடவே எல்லையுட் படுக!

# அருளிச் சுவடி

## (அஃதிருந்தோர் - அருஞ்சிறு குறுவரி)

## (= அஃது+இருந்து+ஓர்+அரும்+சிறு+குறு+வரி)

### அரியகற் கவாவு

**சொற்பிரிப்பு:** (இயல்பு) அரிய - கற்க -அவாவு.
சொற்பொருள் : அரிய = அரியன, அரும்பொருள்கள்,
அரும்பொருள்களை உள்ளடக்கிய நுண்மையார்ந்த உயர்நூல்கள் கற்க : கற்பதற்காக- (கற்றுத் தேர்வதற்காக)
அவாவு: அவாக்கொள்-பற்றுக் கொள் - பெரு விருப்பங்கொள்.

"அவ்" :- கீழுதடு - மேலுதட்டின்கீழே பற்களோடு பற்றிப் பொருந்திய உட்கிடப்பிலாக எழுப்பியதன் ஒலியீட்டினுள் - பற்றுகைப்பொருட்பாடு அதனுள் இருப்பதனையும் உணர்ந்து - அதனின்று பற்றினைக் குறித்த "அவவு" என்றவாறு, ஓர் அருஞ்சொல் எழுப்பினான், - நம்மவன்!

வேட்கையெனும் விருப்பத்தைக் குறித்த அவ் "அவவு" எனும் சொல், கழக இலக்கியங்களுக்கிடையே மூவிடத்துள் பதிவுற்றுளது!

"அவவுக் கைவிடுதலும்" (கலி.: 14 : 19) (மேலுங் காண்க: நற்றிணை: 212 : 10 ஐங்குறு: 360 : 3)

விருப்பமெழும் மனத்தை, "அவவுறு நெஞ்சம்" என்னும், பெருங்கதை. (பெருங்: 2:18:8)

வினைச்சொல்லாகவும் - பண்புப்பெயர்ச்சொல்லாகவும் வழங்கப்பட்டிருத்தல் - சொல்லமைவு உணர்த்தும் செய்தி! "அவவு"

எனும் வினைச்சொற்பொருட்பாட்டு வழக்கினை "அவாவு" எனும் சொல்லாட்சியுள் தெளியலாம்! (காண்க: "உறையுள் வயங்கியோர் அவாவும்.... சோலை" குறிஞ்சி: 213 : 214)

(ஒரு சொல் தன்னொடு பொருந்திப் பொருள் முடித்தற்குரிய மற்றொரு சொல்லை வேண்டி நிற்கும் நிலை, "அவாய் நிலை"! (காண்க: தொல். சொல். 1. சேனாவரையர்)

அவவு > அவா (ஒ. நோ.: நிலவு > நிலா உலவு > உலா)

**பொழிப்புரை :** அரும்பொருள்களை உள்ளடக்கிய உயர்நிலைச் சிறப்புநூல்களைக் கற்றுத் தேர்வதற்கென்று பெருவிருப்பங் கொள்ளுவாயாக!

**கருத்து:** கற்றுத் துறைபோகிய அரும்பெருந் திறக்கல்வி-யாளர்களால் ஆழ்ந்துணர்ந்து ஆவணப்படுத்திவைத்துள்ள நுண்ணிய ஆற்றல்சான்ற அரும்பொருள்களார்ந்த நூல்களைக் கற்றுத் தெளிவடைந்து பயன்விளைக்கவேண்டுமென்ற பெருநோக்கத்தோடு அவற்றை மேற்கொள்ளப் பெரிதும் விரும்புவாயாக!

**குறிப்பு :** மிகப் பல கோடி நூல்கள் இதுவரை எழுதப்பெற்றுப் பதிப்பிக்கப் பெற்றுள்ளன! இன்று- இவ்வுலகில் நொடிக்கு நொடி நூற்றுக்கணக்கில் நூல்கள் உருவாகி வெளிப்பட்டுக் கொண்டேயிருக்கின்றன!

[நடைபயின்று ஓடவும் இயலும் மூவகவைக் குழந்தையொன்று, - இதுவரை உலகில் வெளியாகியுள்ள நூல்அணிவரிசைகளில் ஒவ்வொரு ஆக்கத்தையும் கைவிரலால் தொட்டவாறே ஓடத் தொடங்கினால் - இதுவரை வந்துள்ள நூல் ஆக்கங்களை மட்டுமே தொட்டு முடிப்பதற்கு – அக் குழந்தை, - குறைந்தது மூவாயிரம் ஆண்டுக்காலம் உயிர்வாழ்ந்தாக வேண்டும்

- என்பது உண்மையான ஒரு விளையாட்டுக் கணக்கு!.... எங்கோ - எப்பொழுதோ படித்தது நினைவுப் பாதையில் ஓடுகின்றது!]

கணியுள் – (கணிப்பொறியுள்) பரம்பலுறும் துறைச்செய்திகளின் பருப்பமோ - சொல்லி மாளாது! பல்வேறு ஊடகங்களிலும் அறிவுச் செய்திகள் பரப்பப்பெறுகின்றன! அறிவியல் வானெழுந்துலவி விரையும் பேராற்றற் காலத்தில் நாம் அனைவரும் வாழ்கின்றோம்!

("கணினி" என்பது, தமிழ் மரபறியாத எவனோ ஒரு தாட்டோட்ட மடவனால் உருவாக்கப்பட்ட சொல்; அரைவேக்காட்டுப் பருப்பு!... இலக்கண-வறிஞன் ஒருவனுக்கு இவ் வேகாமை விளங்காது!)

கணித்தல் எனும் வினைப்பெயர், கணக்கிடுதலைக் குறிப்பதாகும்! கணக்கிடுதலும் கணிப்பிடுதலே! இக் கணிப்பீட்டு வினைப்பொறியினைக் "கணி" என்ற சொல் கொண்டே பொருத்தியாளுகை, - மரபுவழிக்கு எதிரானதன்று! மரபே! உட்படுவதே!

"கணி" என்னும் சொல், வினைச்சொல்லாக மட்டுமன்றிக் கணிப்பவனாகிய ஆளுக்குமாகப் பொருத்தலுற்று வழங்கிய ஆட்சியை ஓர்ந்து அறிதல் வேண்டுவதாகும்!

குறிப்பிட்ட துறையில் தேர்ந்த அறிஞன் ஒருவனைக் "கணி" என்றதும், பண்டை வழக்கே! (காண்க: "ஆசான் பெருங்கணி" சிலம்பு: 22 : 8)

எனவே, "கணினி" எனல், இனி - வேண்டா!

"கணி" என்னுக! கனிந்த கனிச்சொல், இது! வழங்குமாறு கனிவுடன் வேண்டப் பெறுகின்றது, இந்த அணி!

"கண்டது கற்கப் பண்டிதனாவான்!" என்பது, நீண்ட காலமாகவே வழங்கிவரும் ஒரு தமிழ்ப் பழமொழி! இப் பழமொழிப்படியே கண்ணில் கண்டநூல்களையெல்லாம் - கையிற் கிடைத்த செய்தித் தொகுப்புக்களையெல்லாம் படிக்கவும், கவனம் செலுத்தவும், ஊன்றவும் ஆக, நாம் வினை மேற்கொள்ளின் - உண்மையான திற மேம்பாட்டை நாம் அடையவியலாது! நேர அலைக்கழிப்பில் மாட்டிக் கொண்டு வீணே அலமருண்டு செயல்திறங் குலைத்துக் கொண்டவர்களாகவே ஆவோம்!

"கண்டது கற்கப் பண்டிதனாவான்!" என்பதை மேற்கொள்ளுவோன் எவனும் இந்நிலையையே அடைவான்! எந்த நிலை? "கண்டது கற்க முண்டமாவான்!" என்பதுவே, அந் நிலை!

தான் மேற்கொண்டுள்ள தொழிலுக்கேற்ற - தெள்ளிய - நுண்மையார்ந்த அருந்திறப் பெருநூல்களை - அத்துறையில் கற்றுத் திறம் பெற்று மேம்பாடடைந்துள்ள அறிவர்களிடம் கருத்து விளக்கம் பெற்று, உரிய அவ் அரிய நூல்களைப் பற்றி அறியவும் - அடையவும் பெற்று ஆழ்ந்து அவற்றுக்குள் கருத்துச் செலுத்தித் தெளிவார்வதற்கென்று பெருவிருப்பத்தைக் கொள்ளவேண்டும்.

விருப்பங்கொள்ளுதல் - வினைமேற்கொண்டு சிறப்பதற்காகவே! வெறும் விருப்பம் மட்டுமன்று, ஈண்டுக் குறித்த கருத்து! 'அறஞ்செய விரும்பு!"' என்பதனுள், - விருப்பத்தினை மேற்கொள் என்பதற்கும் மேலாக, - விரும்பி வினை-மேற்கொள்ளுக! என்னும் பொருள் உள்ளடங்கியிருப்பதைப் போன்றதுவே- இவ் '"அவாவு" எனும் சொல் தரும், பொருளுமாம்!

# அருஞ்சுவடி

| | |
|---|---|
| அறப்படித் தடங்கு! | (அற + படித்து + அடங்கு) |
| ஆய்முதற் றெய்வம் ! | (ஆய் + முதல் + தெய்வம்) |
| இரும்பென வுடல்செய் ! | (இரும்பு + என + உடல் + செய்) |
| ஈகநெஞ் சங்கொள் ! | (ஈக(ம்) + நெஞ்சம் + கொள்) |
| உரிமையி லுறுதிகொள் ! | (உரிமையில்+உறுதி + கொள்) |
| ஊழெதிர்த் துயர்க ! | (ஊழ் + எதிர்த்து + உயர்க) |
| எதனையு மாய்ந்துகொள்! | (எதனையும் +ஆய்ந்து + கொள்) |
| ஏற்றமே யெண்ணுக ! | (ஏற்றம் + ஏ + எண்ணுக!) |
| ஐயறுத் தறிவுறு! | (ஐ + அறுத்து + அறிவு + உறு) |
| ஒண்டமி ழுன்மொழி ! | ((ஒள்)> ஒண்+தமிழ்+உள் +மொழி) |
| ஓய்வென லொழிவே ! | (ஓய்வு + எனல் + ஒழிவே) |
| ஔவுக மெய்ந்நெறி ! | (ஔவுக+ மெய் + (உம்)> ந் + நெறி) |
| கண்ணியங் கலந்துறை! | (கண்ணியம் + கலந்து + உறை) |
| சமையத்துட் சரிசெய் ! | (சமையத்து + உள் + சரி + செய்) |
| தவறெனிற் றறிதவிர்! | (தவறு + எனில் + தறி + தவிர்) |

| | |
|---|---|
| நலனவே நண்ணுக ! | (நலன + ஏ + நண்ணுக) |
| பழகலே நண்பிலை! | (பழகல் + ஏ + நண்பு + இலை) |
| நான்றிமிர் நசுக்கு! | (நான் + திமிர் +நசுக்கு) |
| மனப்பறப் படக்கு ! | (மன(ம்) + பறப்பு + அடக்கு) |
| வரைதெளிந் துவந்துவாழ்! | (வரை+தெளிந்து + உவந்து+வாழ்) |
| காலத்துக் கேதிணை! | (காலத்துக்கு + ஏது + இணை) |
| சாதலுக் கஞ்சிடேல்! | (சாதலுக்கு + அஞ்சிடேல்) |
| தாலமுன் றலைச்சொம் ! | (தாலம் + உன் + தலை + சொம்) |
| பாச்செயப் பயில்சுவை ! | (பா + செய + பயில் + சுவை) |
| மாபெரு மிசைக்கியல் ! | (மா+பெரும் + இசைக்கு + இயல்) |
| வாழ்த்தெழ வாழ்ந்திற ! | (வாழ்த்து + எழ + வாழ்ந்து + இற) |
| ஞாலமுன் னறுமனை! | (ஞாலம் + உன் + நறு(ம்) + மனை) |
| யாரையு மளவறி ! | (யாரையும் + அளவு + அறி) |
| கிறுக்கரா?!... தொடர்பறு! | (கிறுக்கரா + தொடர்பு + அறு) |
| சினங்கொளல் சினத்தனம்! | (சினம்+கொளல்+சின(சின்ன)+தனம்) |
| திருத்தமே திருவெனல் ! | (திருத்தம் + ஏ + திரு + எனல்) |
| நிலைப்பதோர் புகழ்ப்பே ! | (நிலைப்பது + ஓர் + புகழ்ப்பு + ஏ) |
| பிழைப்பொழி யுழைத்தெழு ! | (பிழைப்பு +ஒழி + உழைத்து + எழு) |
| மினல்தவிர் நிலைத்தொளிர் ! | (மினல் + தவிர் + நிலைத்து + ஒளிர்) |
| விரைவினை விழல்தெளி ! | (விரை + வினை + விழல் + தெளி) |
| கீழ்மையின் இழிவிலை! | (கீழ்மையின் + இழிவு + இலை) |
| சீரினுஞ் சிறப்பிலை ! | (சீரினும் + சிறப்பு +இலை) |

| | |
|---|---|
| தீங்கெணந் தீய்த்தெறி ! | (தீங்கு + எணம் + தீய்த்து + எறி) |
| நீயுனில் நெறியுறு! | (நீ + உனில் + நெறி + உறு) |
| பீற்றுதல் பீறலே ! | (பீற்றுதல் + பீறல் + ஏ !) |
| மீட்டுநின் குணத்துயாழ் ! | (மீட்டு + நின் + குணத்து + யாழ்) |
| வீட்டுவுன் வீண்மடி ! | (வீட்டு + உன் + வீண் + மடி) |
| குடிநலக் கொள்கையார் ! | (குடிநலம் + கொள்கை + ஆர்) |
| சுற்றெனல் சுடரவர் ! | (சுற்று + எனல் + சுடரவர்) |
| துயர்வரின் தொய்வுறேல்! | (துயர்+ வரின் + தொய்வு + உறேல்) |
| நுண்ணுரை நுவலுக ! | (நுண் + உரை + நுவலுக) |
| முயறலில் முறிவுறேல் ! | (முயறலில் + முறிவு + உறேல்) |
| கூடுக கொளைநெறி ! | (கூடுக + கொளை + நெறி) |
| சூடெனல் அறிவெரி ! | (சூடு + எனல் + அறிவு + எரி) |
| நூனுழை நுணங்கொளிர் ! | (நூல் + நுழை +நுணங்கு + ஒளிர்) |
| பூப்பெலாங் காய்த்திடா ! | (பூப்பு + எலாம் + காய்த்திடா) |
| மூச்செனல் மொழிபிடி ! | (மூச்சு + எனல் + மொழி + பிடி) |
| கெடும்பருள் உறவுறேல்! | (கெடும்பருள் + உறவு + உறேல்) |
| செப்பிடேல் செய்துதீர் ! | (செப்பிடேல் + செய்து + தீர்) |
| தெளிந்துணர்ந் துரைபுரி! | (தெளிந்து+உணர்ந்து+உரை+புரி) |
| நெருநலென் றும்வரா! | (நெருநல் + என்றும் + வரா) |
| பெருமைநேர் பிறிதிலை ! | (பெருமை + நேர் + பிறிது + இலை) |
| மெய்க்குமேன் மினுக்கிலை ! | (மெய்க்கு +மேல்+மினுக்கு+ இலை) |

| | |
|---|---|
| வென்றிடத் தொடர்ந்துழை ! | (வென்றிட+தொடர்ந்து+உழை) |
| கேள்வியே அறிவடி ! | (கேள்வியே + அறிவு + அடி) |
| சேய்துசேண் சோர்வுறேல் ! | (சேய்து+சேண்+சோர்வு+உறேல்) |
| நேயனா நின்னிலை ! | (நேயனா?..+ நில் +நிலை) |
| தேன்விளை வுத்தெளி ! | (தேன் + விளைவு + தெளி) |
| நேர்மையுள் நிறுத்துனை ! | (நேர்மை+உள்+நிறுத்து+ உனை) |
| பேயெனல் மனமருள் ! | (பேய் + எனல் + மன(ம்) + மருள்) |
| மேம்பட வெயர்த்துழை ! | (மே(ல்) > + ன் + ம் + பட + வெயர்த்து + உழை) |
| வேந்தென அறிவில்நில் ! | (வேந்து + என + அறிவில் + நில்) |
| கையையே கைக்கொள் ! | (கையை + ஏ + கை + கொள்) |
| நைபடும் நலிவுளம் ! | (நைபடும் + நலிவு + உளம்) |
| பைம்மனம் பற்றுறு ! | (பை + (உ)ம் + மனம் +பற்று +உறு) |
| மைம்மாசு மாய்ப்பொளி ! | (மை+(உ)ம்+ மாசு + மாய்ப்பு+ஒளி) |
| வைப்புலம் வளர்த்தெழு ! | (வை + புலம் + வளர்த்து + எழு) |
| கொடைமனங் கொடுகொடு ! | (கொடை+மனம் + கொடு + கொடு) |
| சொத்தெனற் சோர்வறல் ! | (சொத்து+எனல் + சோர்வு +அறல்) |
| தொல்லையில் தோள்கொடு ! | (தொல்லையில் + தோள் + கொடு) |
| கோடிலா முடிபெடு ! | (கோடு + இலா + முடிபு + எடு) |
| பொலிவெனற் புலத்தொளி ! | (பொலிவு + எனல் + புலத்து + ஒளி) |
| மொய்ப்புறு முனைவரை ! | (மொய்ப்பு + உறு + முனைவரை) |

| | |
|---|---|
| சோர்வுறின் சா !.. மடி! | (சோர்வு + உறின் + சா + மடி) |
| அழகெது வொழுங்கது ! | (அழகு + எது + ஒழுங்கு + அது) |
| ஆண்மைநின் றடக்குகை ! | (ஆண்மை + நின்று + அடக்குகை |
| இனிப்புசேர்ந் திழிப்புழும்! | (இனிப்பு+சேர்ந்து+இழிப்பு+உழும்) |
| ஈருறப் பேன்மிகும்! | (ஈர் + உற + பேன் + மிகும்) |
| உரந்தர லுழைப்பே ! | (உரம் + தரல் + உழைப்பு + ஏ) |
| ஊளையே நரியொலி ! | (ஊளை + ஏ + நரி + ஒலி) |
| எழல்விழ லியல்பே ! | (எழல் + விழல் + இயல்பே) |
| ஏறுங்கால் நோக்குமேல் ! | (ஏறும் + கால் + நோக்கு + மேல்) |
| ஐயர்மேஞ் சீரியோர் ! | (ஐயர் + மே + (உ)ம் + சீரியோர்) |
| ஒருவனீ உயிரிடை ! | (ஒருவன் + நீ + உயிர் + இடை) |
| ஓடிடின் வெருட்டும் ! | (ஓடிடின் + வெருட்டும்) |
| ஔவை நெஞ் சந்தொழு ! | (ஔவை + நெஞ்சம் + தொழு) |
| அடிபடின் திமிறிமீள்! | (அடிபடின் + திமிறி + மீள்) |
| ஆடுகோ ளார்தொடர் ! | (ஆடு + கோள் +ஆர்+தொடர்) |
| இருப்பினுள் நிறைவுநேர் ! | (இருப்பினுள் + நிறைவு + நேர்) |
| ஈரகத் தவர்தவிர்! | ஈர் + அகத்தவர் + தவிர்) |
| உன்னுள வுனையுணர்! | (உள் + உள + உனை + உணர்) |
| ஊடறுத் துட்டெளி ! | (ஊடு + அறுத்து + உள் + தெளி) |
| எதிர்க்கெதிர் நேரிணை! | (எதிர்க்கு + எதிர் + நேர் + இணை) |
| ஏறுமா றியற்கைகாண் ! | (ஏறு + மாறு + இயற்கை + காண்) |

| | |
|---|---|
| ஐவிர லமைவுணர்! | (ஐ + விரல் + அமைவு + உணர்) |
| ஒல்வதோ ருழைமுடி! | (ஒல்வது + ஓர்+ உழை + முடி) |
| ஓர்ப்பா ருயர்ச்சிமேல் ! | (ஓர்ப்பு + ஆர் + உயர்ச்சி + மேல்) |
| ஔவைபேர்ம் பொறுப்புவான்! | (ஔவை + பேர் + (உ)ம் + பொறுப்பு + வான்) |
| அருமறை யறமறி ! | (அரு(ம்) + மறை + அறம் + அறி) |
| ஆய்ந்துதோய்ந் தறிவையோர் ! | (ஆய்ந்து+ தோய்ந்து+ அறிவை +ஓர்) |
| இரும்பொறை வெற்றிவாய்! | (இரும்+ பொறை + வெற்றி + வாய்) |
| ஈவேற் றிழிவுறேல் ! | (ஈவு + ஏற்று + இழிவு + உறேல்) |
| உறுதியுட் டிணுக்கம் ! | (உறுதி + உள் + திணுக்கம்) |
| ஊன்பருத் தயர்ப்புறேல் ! | (ஊன்+பருத்து+அயர்ப்பு + உறேல்) |
| எலிக்குகைக் கிளைப்புணர் ! | (எலி + குகை + கிளைப்பு + உணர்) |
| ஏறலி னேற்றல்மேல்! | (ஏறலின் + ஏற்றல் + மேல்) |
| அறிவுறின் பயன்விளை! | (அறிவு + உறின்+பயன்+விளை) |
| ஆரெனி னும்பணி! | (ஆர் + எனினும் + பணி) |
| இரும்பொறை யாலுயர்! | (இரும்+ பொறையால் + உயர்) |
| ஈன்றவர்ப் பணிந்துபேண்! | (ஈன்றவர்+ பணிந்து + பேண்) |
| எவரையு மெதிர்கொள்! | (எவரையும் + எதிர் + கொள்) |
| ஏலா தனதவிர்! | (ஏலாதன + தவிர்) |
| ஐயுறற் கையுறு ! | (ஐயுறற்கு +ஐயுறு) |
| ஐயுறே லனைத்தையும்! | (ஐயுறேல் + அனைத்தையும்) |
| ஒள்ளியுள் ளுரம்பேண் ! | (ஒள்ளியுள் + உரம் + பேண்) |

| | |
|---|---|
| ஓய்ந்துயிர்த் தெழுந்துழை ! | (ஓய்ந்து+உயிர்த்து+ எழுந்து+உழை) |
| அடங்குறு வொடுங்குறேல்! | (அடங்குறு + ஒடுங்கு + உறேல்) |
| ஆலென வாழ்வுறு ! | (ஆல் + என + வாழ்வு + உறு) |
| இளைமையாண் டிருபதே ! | (இளமை + ஆண்டு + இருபது + ஏ) |
| ஈடுணர்ந் திணைந்தியல் ! | (ஈடு + உணர்ந்து + இணைந்து+இயல்) |
| உருப்பிறப் பொரேதரம் ! | (உரு + பிறப்பு + ஒரு + ஏ + தரம்) |
| ஊறுநீ ரறாத்தொடர்! | (ஊறு + நீர் + அறா + தொடர்) |
| எருமைபோற் றிண்டயிர்! | (எருமை + போல் + திண் + தயிர்) |
| ஐம்மைநோட் டம்பயில்! | (ஐம்மை + நோட்டம் + பயில்) |
| ஒன்றியூன் றொன்றுசெய்! | (ஒன்றி + ஊன்றி + ஒன்று + செய்) |
| ஓத்துள னிறுத்து! | (ஓத்து + உளன் + நிறுத்து) |
| ஔவிய மறுத்தெறி ! | (ஔவியம் + அறித்து + எறி) |
| அறம்நய னேயமே ! | (அறம் + நயன் + நேயம் + ஏ) |
| ஆழ்தலே யுயர்தலாம்! | (ஆழ்தல் + ஏ + உயர்தல் + ஆம்) |
| இறுக்குடைத் திளகுறு ! | (இறுக்கு+உடைத்து+இளகு+உறு) |
| ஈட்டங்கா !... காக்கும்! | (ஈட்டம் + கா + காக்கும்) |
| உலைவுறா துரத்தெழு! | (உலைவு+ உறாது + உரத்து + எழு) |
| ஊன்றிநின் றமர்ந்துசெய் ! | (ஊன்றி+ நின்று+ அமர்ந்து + செய்) |
| எணல்வரை மிகற்பிழை ! | (எணல் + வரை + மிகல் + பிழை) |
| ஏழ்பிறப் பெழுந்ததே ! | (ஏழ் + பிறப்பு + எழுந்தது + ஏ) |
| ஐம்பொறியு ளையுணர்வு! | (ஐ+(உ) ம்+பொறி+உள்+ஐ+உணர்வு) |
| ஒன்றினு ளொன்றியாழ் ! | (ஒன்றினுள் + ஒன்றி + ஆழ்) |

| | |
|---|---|
| ஓய்வுகொண் டுறுதியார்! | (ஓய்வு + கொண்டு + உறுதி + ஆர்) |
| ஔவையீ கையிறை ! | (ஔவை + ஈகை + இறை) |
| அச்சமே யிறைக்கரு ! | (அச்சம் + ஏ + இறை + கரு) |
| ஆல்வீழ் தெனநிலை ! | (ஆல் + வீழ்து + என + நிலை) |
| இருப்பெலாம் புரள்வுறும்! | (இருப்பு+ எலாம் + புரள்வு + உறும்) |
| ஈடெணா வாழ்வுவாய்! | (ஈடு + எணா + வாழ்வு + வாய்) |
| உருளுரு வுருண்டை! | (உருள் + உரு + உருண்டை) |
| ஊசின வுதவா! | (ஊசின + உதவா) |
| எதனையு முன்னெண்! | (எதனையும் + முன் + எண்) |
| ஏற்குமா றியக்குறு! | (ஏற்கும் + ஆறு + இயக்கு + உறு) |
| ஐந்நுண் ணறிவுகூர்! | (ஐ +(உ(ம்>) ந்+நுண்+அறிவு +கூர்) |
| ஒழுக்குநன் னயனடை ! | (ஒழுக்கு + நல் + நயன் + நடை) |
| ஓய்வுழைப் படிப்படை! | (ஓய்வு + உழைப்பு + அடிப்படை) |
| ஔவிய மொருவு ! | (ஔவியம் + ஒருவு) |
| அகம்புற மவாவறு! | (அகம் + புறம் +அவா + அறு) |
| ஆரெவர் அறிவொடார் ! | (ஆர் + எவர் + அறிவொடு +ஆர்) |
| இனப்பகைக் கெதிர்ந்துதீர்! | (இன(ம்)+பகைக்கு + எதிர்ந்து + தீர் |
| ஈரெலாம் பேன்மகார் ! | (ஈர் + எலாம் + பேன் + மகார்) |
| எறும்புவாய்ப் பிடிவாள் ! | (எறும்பு + வாய் + பிடி + வாள்) |
| ஏதிறை கற்பனை ! | (ஏது + இறை + கற்பனை) |
| ஐம்பொறி அறிவுவாய்! | (ஐ +(உ)ம்+பொறி+அறிவு + வாய்) |

| | |
|---|---|
| ஒன்றியோர்ந் துழைத்துயர்! | (ஒன்றி+ஓர்ந்து+உழைத்து + உயர்) |
| ஓர்ப்பறா தோகையார்! | (ஓர்ப்பு + அறாது + ஓகை + ஆர்) |
| ஒளவியம் அகத்தறு! | (ஒளவியம் + அகத்து + அறு) |
| அகத்துளு முளதுளம்! | (அகத்து+உளும் + உளது +உளம்) |
| ஆழ்மனத் துறங்குமெய்! | (ஆழ்+மனத்து +உறங்கு(ம்) + மெய்) |
| இழிப்போ ரொரீஇயொறு! | (இழிப்போர் + ஒரீஇ + ஒறு) |
| ஈயா ரிரவலர்! | (ஈயார் + இரவலர் ) |
| உணவூன் மருந்து! | (உணவு + ஊன் + மருந்து) |
| ஊனூண் சிறிதுறு ! | (ஊன் + ஊண் + சிறிது + உறு) |
| என்னெனக் கேள்விகேள்! | (என் + என + கேள்வி + கேள்) |
| ஏதிலேற் றோதுறா! | (ஏது +இலேல் + தோது + உறா) |
| ஐயர்நஞ் சால்பரோர்! | (ஐயர் + நம் + சால்பர் + ஓர்) |
| ஒன்றுபன் முறையோர்! | (ஒன்று + பன்முறை + ஓர்) |
| ஓவா துயிர்த்திரு ! | (ஓவாது + உயிர்த்து + இரு) |
| ஒளவைமை அருமைமெய் ! | (ஒளவைமை + அருமை + மெய்) |
| அருந்திரு மறைகுறள்! | (அரும் + திரு + மறை + குறள்) |
| ஆரெனி னென்னெதிர்! | (ஆர் + எனின் + என் + எதிர்) |
| இருமனந் தோற்றிறும்! | (இரு + மனம் + தோற்று + இறும்) |
| ஈகனீத் திற்றவன்! | (ஈகன் + ஈத்து + இற்றவன்) |
| உரைநடை யொழுங்கடி! | (உரை + நடை + ஒழுங்கு + அடி) |
| ஊதனோய் வலிவிலை ! | (ஊதல் + நோய் + வலிவு +இலை) |

| | |
|---|---|
| ஊன்குறைத் தூண்சுவை ! | (ஊன்+ குறைத்து + ஊண் + சுவை) |
| எழிலெழற் கவற்கவின்! | (எழில் + எழல் + கவல் + கவின்) |
| ஏற்றெதிர் கொள்ளெதிர்! | (ஏற்று + எதிர் + கொள் + எதிர்) |
| ஐவிர லெண்கரு! | (ஐ + விரல் + எண் + கரு) |
| ஒறுத்தலச் சுறுத்தலே! | (ஒறுத்தல் + அச்சுறுத்தல் +ஏ) |
| ஓத்துவெற் றார்ப்புவீண் ! | (ஓத்து + வெற்று + ஆர்ப்பு + வீண்) |
| ஔவிப் பழுக்கழி ! | (ஔவிப்பு + அழுக்கு + அழி) |
| அறாப்பயில் வருந்திறம்! | (அறா + பயில்வு + அரு(ம்) + திறம்) |
| ஆண்மைவல் லாளுமை ! | (ஆண்மை + வல் + ஆளுமை) |
| இளியேல் சிரிநகை! | (இளியேல் + சிரி + நகை) |
| ஈர்ப்பினுட் சிக்குறேல்! | (ஈர்ப்பின் + உள் + சிக்குறேல்) |
| உறக்கினுட் குறைகனா! | (உறக்கின் + உள் + குறை + கனா) |
| ஊட்டவூ ணளவொடுண்! | (ஊட்ட(ம்)+ஊண்+அளவொடு+உண்) |
| எழுத்தென லொலியுரு ! | (எழுத்து + எனல் + ஒலி + உரு) |
| ஏறுமா ணேறு! | (ஏறும்+ ஆண் + ஏறு) |
| ஐயுறு வறிவொடு ! | (ஐயுறு + அறிவொடு) |
| ஒன்னலர் நினைவுநீ ! | (ஒன்னலர் + நினைவு + நீ) |
| ஓர்ந்துதேர்ந் தெடுவினை ! | (ஓர்ந்து + தேர்ந்து + எடு + வினை) |
| ஔவைசொற் குளிர்மழை ! | (ஔவை + சொல் + குளிர் + மழை) |
| அகங்கொள அறிவையீர்! | (அகம் + கொள + அறிவை + ஈர்) |
| ஆய்ந்தமர்ந் தறிவுறு ! | (ஆய்ந்து+ அமர்ந்து +அறிவு + உறு) |

இனிப்பினா வாக்கலாம் ! (இனிப்பு + இனா + ஆக்கல் + ஆம்)

ஈர்ந்திரி எரிதரும்! (ஈர் +(உ) ம் + திரி + எரி + தரும்)

உறுதிணி வுறுதியார் ! (உறு + திணிவு + உறுதி + ஆர்)

ஊக்கொடு தோய்ந்துழை ! (ஊக்கு + ஒடு + தோய்ந்து + உழை)

எள்ளற்க எவரையும்! (எள்ளற்க + எவரையும்)

ஊன்தவிர் - கறியுண்! (ஊன் + தவிர் + கறி + உண்)

எள்ளினார்க் கிளைத்திடேல் ! (எள்ளினார்க்கு + இளைத்திடேல்)

ஏர்வினைக் கிணையிலை! (ஏர் + வினைக்கு + இணை + இலை)

ஐதாய்ந்த வறிவொளி! (ஐது + ஆய்ந்த + அறிவு + ஒளி)

ஒல்லாத தொலும் -முயல்! (ஒல்லாதது + ஒலும் + முயல்)

ஓர்ந்துதோய்ந் தொருமைகொள்! (ஓர்ந்து + தோய்ந்து+ஒருமை+கொள்)

ஒளவைநே ராருயிர்! (ஒளவை + நேர் + ஆர் + உயிர்)

அறுதிதோய்ந் தாய்ந்து தீர்! (அறுதி + தோய்ந்து + ஆய்ந்து + தீர்)

ஆரவாய்ந் தமர்ந்து செய்! (ஆர + ஆய்ந்து + அமர்ந்து + செய்)

இரும்பொறை யாலொறு! (இரும் + பொறையால் + ஒறு)

ஈர்ப்பெதிர் வலுக்குறை! (ஈர்ப்பு + எதிர் + வலு + குறை)

உலகவா முளமுறு! (உலகு + அவாம் + உளம் + உறு)

எலாமயிர் வீழ்விலெண்! (எலாம் + மயிர் + வீழ்வில் + எண்)

ஏழ்ந்துவீழ்ம் எதுநிலை ! (ஏழ்ந்து + வீழ்ம் + எது + நிலை)

ஐயணுப் பிணைவுதேர்! (ஐ + அணு + பிணைவு + தேர்)

ஒடுக்கியோ ரத்தெறி ! (ஒடுக்கி + ஓரத்து + எறி)

| | |
|---|---|
| ஓலிடே லோச்சுகை ! | (ஓல்+இடேல் + ஓச்சு + கை) |
| ஔவைநஞ் செய்ந்தமிழ் ! | (ஔவை + நம் + செய்ம் + தமிழ்) |
| அரியகற் கவாவு ! | (அரிய + கற்க + அவாவு) |
| ஆயா திரங்கேல் ! | (ஆயாது + இரங்கேல்) |
| இருப்பதி ராதுபோம்! | (இருப்பது + இராது + போம்) |
| ஈதலும் பேறே ! | (ஈதலும் + பேறு + ஏ) |
| உயருழைத் தேறுவான்! | (உயர் + உழைத்து + ஏறு + வான்) |
| ஊர்நுழைந் துளந்தெளி ! | (ஊர் + நுழைந்து + உளம் + தெளி) |
| எருமையிற் பொறுமைதேர்! | (எருமையின் + பொறுமை + தேர்) |
| ஏறிடப் பணிகுனி ! | (ஏறிட + பணி + குனி) |
| ஐயுறற் கயர்வுறேல் ! | (ஐயுறற்கு + அயர்வு + உறேல்) |
| ஒள்ளறி வொட்பம் ! | (ஒள் + அறிவு + ஒட்பம்) |
| ஓர்மைதேர்ந் துணர்ந்துயர்! | (ஓர்மை+ தேர்ந்து+உணர்ந்து + உயர்) |
| ஔவையெவ் வுயிர்க்குமேல்! | (ஔவை + எவ்வுயிர்க்கும் + மேல்) |
| அகநலம் முகங்கொளும் ! | (அக(ம்) நலம் + முகம் + கொளும்) |
| ஆரிய ரையரில் ! | (ஆரியர் + ஐயர் + இல்) |
| இறுமாப் பிழிக்குமே! | (இறுமாப்பு + இழிக்கும் +ஏ) |
| ஈர்ப்பதே கவர்ச்சி ! | (ஈர்ப்பது + ஏ + கவர்ச்சி) |
| உயிரெது மூச்சே ! | (உயிர் + எது + மூச்சே) |
| உகந்தவூ ணளந்துண்! | (உகந்த + ஊண் + அளந்து + உண்) |
| ஊளைத் தசைதவிர்! | (ஊளை + தசை + தவிர்) |
| எளிமையே பெருமையாம் ! | (எளிமை + ஏ + பெருமை + ஆம்) |

| | |
|---|---|
| ஏணியே இறங்கவும் ! | (ஏணி + ஏ + இறங்கவும்) |
| ஐயர்பார்ப் பாரலர்! | (ஐயர் + பார்ப்பார் + அலர்) |
| ஒருமுகப் பட்டுயர்! | (ஒரு முகம் + பட்டு + உயர்) |
| ஓய்தலும் பாய்தலே! | (ஓய்தலும் + பாய்தல் +ஏ) |
| ஔவைமீ யன்புரு ! | (ஔவை + மீ + அன்பு + உரு) |
| அழாதழ லாகுதீய்! | (அழாது + அழல் + ஆகு + தீய்) |
| ஆர்ப்பன வெலாம்வெலா ! | (ஆர்ப்பன + எலாம் +வெலா) |
| இருப்பறா தியற்று ! | (இருப்பு + அறாது + இயற்று) |
| ஈட்டியீ னீட்டிசை ! | (ஈட்டி + ஈன் + ஈட்டு + இசை ) |
| உருப்பெற வொருப்பெறு ! | (உரு + பெற + ஒரு + பெறு) |
| ஊறறி யாமையால்! | (ஊறு + அறியாமையால்) |
| எடுபட வினைமுனை! | (எடு + பட + வினை + முனை) |
| ஏற்றமே யிறைக்கவே ! | (ஏற்றம் + ஏ + இறைக்க +ஏ ) |
| ஒளிநம் பினால்வரும் ! | (ஒளி + நம் + பினால் + வரும்) |
| ஓய்ந்துசோம் பாதியல் ! | (ஓய்ந்து + சோம்பாது + இயல்) |
| ஔவைபேண் நன்றிசேர் ! | (ஔவை + பேண் + நன்றி + சேர்) |

***